
ஸையிதினா

# பிலால்



வளர்மதி பதிப்பகம்

தென்னூர் : : திருச்சி

ஸையிதினா

# பிலால்

(ரலி யல்லாஹு அன்ஹு)

## HAZRAT BILAL

ஆசிரியர்:

ஸையித் இப்ராஹீம், எம்.ஏ., எல்.டி.,

ஜமால் முஹம்மத் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

வளர்மதி பதிப்பகம்

தென்னூர் :: திருச்சிராப்பள்ளி

முதற் பதிப்பு 1956 ஏப்ரல் ஹி. 1375 ரமலான்,
இரண்டாம் பதிப்பு 1960 ஜனவரி ஹி. 1379, ரஜப்
மூன்றும் பதிப்பு 1964 பெப்ரவரி ஹி. 1383 ஷவ்வால்
நான்காம் பதிப்பு - 1967 மார்ச் ஹி. 1386 துல்ஹஜ்

25432

உட்பொருள்

1. தோற்றுவாய்
2. இளமையும் இருளும்
3. முஸ்லிமாதல்
4. அவதிகள்
5. பாங்கு
6. பத்ர் போரில்
7. உஹத் போரில்
8. அகழ் போரில்
9 கைபரில்
10. மக்கா வெற்றி
11. தலைவரை இழந்தார்
12. அபூ பக்ருடன்
13. எருஸலம் நகரில்
14. திருமணம்
15. தூது செல்லல்
16 முதுமையும் முடிவும்
17 ஹஸ்ரத் ஸுஹைப் பின் ஸனன்

உரிமைப் பதிவு

விலை ரூ. 0-80

விஜயா பிரிண்டர்ஸ், மலைக்கோட்டை, திருச்சி-2.

# முன்னுரை

"பிலால்" என்றவுடன் நபிபெருமானார் (ஸல்) அவர்களது காலத்திலே முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பவருடைய பெயர் என்பதுமட்டும் முஸ்லிம்களுக்குத் தெரியும். எனினும், அப்புனித மனிதரின் இறை வணக்கம், நாயகமவர்கள்மீது அவருக்கிருந்த உண்மை விசுவாசம், அவரது இஸ்லாமியப் பிரச்சாரத் தாகம் முதலியவற்றை அறிந்தோர் சிலரே. எம்பிரானுடன் வசித்து, அவர்களைக் கண்ணாரக் கண்டு களித்து, அவர்களது சொல்லையும் செயலையும் கூர்ந்து கவனித்து, அவற்றின்படி நடந்து, எக்காலமும் அவர்களை விட்டுப்பிரிய மனமில்லாதவர் பிலால். அபிஸீனிய நாட்டைச் சேர்ந்த, கருநிறமும், தடித்த உதடுமுள்ள ஓர் அடிமைக்கு இத்தகைய உச்சஸ்தானம் எவ்வாறு கிடைத்தது என்று நாம் ஆச்சரியப்படுகிறோம்.

ஆரம்பத்தில் ஏகதெய்வக் கொள்கையை ஒப்புக்கொண்டோர் எட்டு பேர். அவர்களில் பிலால் ஒருவர். ஆனால், அப்பொழுதிருந்த சூழ்நிலையில் பிலால் ஒருவரே அதிக அவதிப்பட்டார் ஏனென்றால், மற்றோர் சுவாதீனர். பிலால் ஓர் அடிமை. அஞ்ஞான இருள் நிறைந்த அவ்வேளையிலே அவருக்கு நேர்ந்த துன்பங்கள் மிகப்பல. எனினும், அவர் மிகப் பொறுமையுடன் இருந்தார்.

பாலைவனத்திலே, நடுப்பகலிலே, சூடு தாங்கமுடியாத மணலிலே கால்கள் கட்டப்பட்டுக் கிடத்தப்பட்டார். வயிற்றின் மீதும் முதுகின்மீதும் பளுவான கற்கள் அழுத்தப்பட்டன. பசியாலும், தாகத்தாலும் துன்பப்பட்டார். வளைந்தர முட் செடிகளைக் கயிராகத் திரித்து அவரது கழுத்து கட்டப்பட்டது. அவரை ஒட்டகங்கள் இங்குமங்கும் இழுத்துச் சென்றன. ஆனால், பிலால் மனந்தளரவில்லை. இத்தகைய பொறுமை, இத்தகைய மன உறுதி, இத்தகைய இறை பக்தி வெகு சிலரிடமே காணப்படும்.

சின்னுட்கள் செல்கின்றன. பிலாலின் அடிமைத்தளை நீங்குகிறது! அவரது பொறுமைக்கு வெகுமதி கிடைக்கின்றது! "இஸ்லாத்தின் முதல் முஅத்தின்" என்ற பாக்கியம் பெறுகிறுர். பாங்கு சொல்லும் பணி சாதாரணமானதொரு பணியல்ல. இதற்குமுன் வேறெவருக்கும் கொடுக்கப்படாத பணி. எம்பிரானவர்கள் இப்பணிக்கென பிலாலைப் பொறுக்கியெடுத்தார்கள். இது கிடைத்தற்கரிய பேறு, அதற்குரியவரும் பிலாலே

பிலால் எப்பொழுதும் பெருமானுரவர்களுடைய திருச் சமூகத்தில் நின்றுகொண்டிருப்பார். இதுவும் சாலச் சிறந்த பேறு. எல்லோருக்கும் எளிதில் எட்டாத வெகுமதி ஹஸ்ரத் பிலாலின் வாழ்க்கை நமக்குப் பெரும் படிப்பினை. நம்மை திருக்குர்ஆனின் பக்கமும், பெருமானுரின் பக்கமும் அது கொண்டுசெல்கின்றது. நமது வாழ்க்கையைப் புனிதமாக்குகின்றது இந்தக் குறிக்கோளை அடைய நமக்கு இறைவன் அருள்புரிவானுக!

ஜமால் முஹம்மத் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.
1—3—1967

ஸையித் இப்ராஹீம்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

புகழ் அனைத்தும் இறைவனுக்கே. ஸலவாத்தும் ஸலாமும் எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்மீதும், அவர்களது கிளையார், தோழர்கள் மீதும், உண்டாவதாக!

---

ஸையிதினு

# பிலால்

ரலியல்லாஹு அன்ஹு

## 1. தோற்றுவாய்

இஸ்லாம் மார்க்கம் பரவிய ஆரம்ப காலம்! மக்கா நகரம்! அங்கு ஒரு தூக்குமரம் நடப்பட்டிருக்கின்றது! அதைச் சுற்றி இரத்தம் குடிக்கும் ஓநாய்களைப் போன்று சில கொடிய மக்கள் நிற்கின்றார்கள்! சிலர் வாட்களை வீசிக்கொண்டே இருக்கின்றார்கள். சிலர் ஈட்டிகளை ஏந்திக்கொண்டு நிற்கின்றார்கள்! இன்னும் சிலர் வில்லேந்தி அம்புகளைப் பூட்டிக் குறிபார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்!

“குபைப்! குபைப்!” (Khubaib!) என்ற ஒரே கூக்குரல்? அந்தக் கூட்டத்தில் ஒரே ஆனந்தம்! ஒரே ஆரவாரம்! மக்கள் இங்குமங்கும் ஓடுகின்றார்கள்! ஆடுகிறார்கள்! கூத்தாடுகின்றார்கள்! ஆயுதங்களைத் தயாரிக்கின்றார்கள்! கொலை செய்யத் தயாராகின்றார்கள்!

அந்தக் கம்பத்தை நோக்கி — மரணத்தை எதிர்பார்த்து ஒருவர் வருகின்றார்! அவர் சத்தியசீலர்! புண்ணிய புருடர்! மெலிந்த உடல்! பல நாட்களாகப் பட்டினி! அவர் மக்கா நகரிலே பிறந்தவர். அங்கே வளர்ந்தவர். ஆனால், முஸ்லிம்! முஸ்லிம் என்றால் அன்று மக்காவில் பகைமை. இஸ்லாம்

என்றால் விரோதம் அவர் இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக் கொண்ட ஒரே குற்றம்! ஏக தெய்வக் கொள்கையைப் பின் பற்றிய ஒரே பிழை! திருக்குர்ஆனையும், முஹம்மத் (ஸல்) என்னும் இறைதூதரையும் தனது வழிகாட்டியாக ஒப்புக் கொண்ட ஒரே தவறு!

ஆண்டவனை ஒப்புக்கொள்ளாமல் நிராகரித்த - பல தெய்வங் களை வணங்கிய அருளற்ற — மக்கா வாசிகள் அவரைப் பிடித் தார்கள். இஸ்லாம் மார்க்கத்தை விட்டுவிடச் சொன்னார்கள். அவர் மறுத்தார். பல நாட்களாக ஆகாராதிகள் இல்லாமல் கைதி யாக வைத்தார்கள். அவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய் தார்கள். பட்டினி போட்டும் அவரை அடக்கமுடியவில்லை. பகிரங்கமாகக் கொலைசெய்துவிடுவதென இறுதியாக முடிவு செய்தார்கள்!

குபைப்! இதுவே அந்தக் கைதியின் பெயர். குபைப் தூக்குமரத்தின் ஓரமாக நிற்கின்றார்! உடலிலிருந்து உயிர் பிரிக்கப்படும் நேரம் நெருங்குகின்றது! கூட்டத்திலிருந்து ஒரு மனிதன் முன்னால் வருகின்றான்!

மனிதன்: குபைப்! உமது துக்கமான, துர்லபமான நிலையைக் கண்டு நாங்கள் வருந்துகின்றோம். இப்பொழுதாவது இஸ்லாம் மார்க்கத்தை விட்டுவிட்டால் நீர் உயிர் தப்பலாம்; என்ன சொல்லுகின்றீர்?

குபைப்: இஸ்லாம் என்னைவிட்டுப் போய்விட்டால், பிறகு, நான் உலகில் உயிருடன் இருந்து என்ன பலன்?

அந்தக் கைதியின் முகத்திலே ஒரு தனி இன்பம் இலங்கு கின்றது! அது இஸ்லாம் அவருக்கு அளித்த இன்பம்! அவரது வார்த்தைகளிலே ஒரு மின்னல் சக்தி! சத்தியம் தோய்ந்த, சக்தி நிறைந்த, அந்த வார்த்தைகள் அங்கிருந்த எதிரிகளின் காதுகளில் இடிஇடித்ததைப் போன்றே இருந்தன.

குபைப் ஒரே ஒரு மனிதர்! அவரைக் கொல்ல இத்தனை ஆட்கள்! இத்தனை வாட்கள்! ஈட்டிகள்! வில்லம்புகள்! சொல்லம்புகள்! ஆனால், கூட்டமானது கைதியின் இந்த வார்த்தைகளால் அதிர்ச்சியடைந்தது! ஆரவாரமெல்லாம் திடீரென்று நின்று விட்டது! ஒரே மௌனம்! மூச்சுப் பேச்சில்லாமல் நின்றுவிட்டார்கள்! பிறகு முதலில் பேசிய மனிதன் மறுபடியும் பேசுகிறான்.

மனிதன்: குபைப்! நீர் உயிர்விடப்போகின்றீர். ஏதாவது வேண்டுமானால் கேட்கலாம்!

குபைப்: இரண்டு ரக்அத் தொழுகை தொழுது கொள்ளுகிறேன்.

"அப்படியே ஆகட்டும்!" என்று கூட்டத்திலிருந்து சப்தம் வருகிறது. குபைப் தூக்குமரத்தின் பக்கத்தில் நிற்கின்றார். தூக்கு மரமும் காத்துக்கொண்டிருக்கின்றது. தூய மனதுடன் மெய்மறந்து ஆண்டவனைத் தொழுகின்றார். அன்று ஆண்டவனை நினைத்து நெஞ்சின்மீது பணிவுடன் வைத்து நின்ற கைகள் இனி அவ்வாறு செய்ய முடியாது! அன்று "ஆண்டவனே எல்லாவற்றிலும் மேலானவன் — அல்லாஹு அக்பர்!" எனக் கூறி பூமியின்மீது வைக்கப்பட்ட சிரசானது இனி அவ்வாறு செய்ய முடியாது. ஆண்டவனை நினைத்தார் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

திடீரென்று கைதியின் மனதில் ஓர் எண்ணம் உதிக்கின்றது. "வெகுநேரம் ஆண்டவனது தியானத்தில் நான் இருந்தால், நான் மரணத்திற்கு அஞ்சுகிறேன் என அல்லாஹ்வின் எதிரிகள் நினைப்பார்களோ" என்ற எண்ணம் உண்டாகிறது. உடனே, 'அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹ்!' "அல்லாஹ்வின் சாந்தியும் கருணையும்

உங்கள்மீது உண்டாவதாக!" — என்று வலப்புறமும், இடப்புறமும் திரும்பிச் சொன்னார். தொழுகையையும் முடித்தார்.

அடுத்த விநாடியில் குபைப் கம்பத்தின் ஓரமாக நிற்கிறார்! எதிரிகள் — ஆண்டவன் ஒருவன் என்ற உண்மையை நிராகரித்தவர்கள் — காபிர்கள் — அவரைக் கம்பத்தோடு சேர்த்துக் கட்டினார்கள். வாட்களும் ஈட்டிகளும் முன்னேறின! சோதனை! பெருஞ் சோதனை! குபைபுடைய ஏக தெய்வக் கொள்கையின் சோதனை! அவரது பொறுமைக் கடலின் பரீட்சை! கூட்டத்திலிருந்து ஒருவன் வருகிறான்! குபைபுடைய உடலின் பல பாகங்களில் தனது ஈட்டியால் இலேசாகக் குத்துகிறான். குத்திய காயங்களிலிருந்து உடனே இரத்தம் சொட்டுச் சொட்டாக வடிகிறது!

இன்னும் சில விநாடிகள் கழிந்தன, குபைப் கட்டுண்டிருக்கின்றார். திடிரென்று அம்புகள் அவர் உடலில் பாய்கின்றன! உடலைப் பிளந்துகொண்டு ஒருபுறத்திலிருந்து மறுபுறம் சென்றுவிடுகின்றன! ஹா! இருதயத்தைப் பிளந்து அப்பால் செல்லுகின்றன! ......ஈட்டிகள் பாய்கின்றன! அவரது நெஞ்சைப் பிளக்கின்றன! குபைபுடைய கண்கள் தம்மை நோக்கி வரும் அம்புகளைப் பார்க்கின்றன! உடலிலிருந்து உதிரம் வடிகின்றது! பொறுக்க முடியாத நோவு! தாங்கமுடியாத துயரம்! சகிக்க முடியாத சங்கடம்! ஆனால், குபைபுடைய உள்ளமோ நிம்மதியுடன் — இல்லை — இன்பத்துடன் — இறைவனிடம் தன்னை ஒப்புவித்துச் சரணடைந்து இஸ்லாம் மார்க்கத்தில் நிலைத்து நிற்கின்றது!

மற்றொருவன் வருகின்றான், ஈட்டியின் நுனியை குபைபுடைய நெஞ்சில் அழுத்திக் குத்துகின்றான். ஈட்டியானது சரீரத்தைத் துளைத்துக்கொண்டு, இடுப்பு வழியாகப் பின்புறம் வந்துவிடுகிறது! ஆனால், குபைபுடைய கண்கள் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கின்றன!

அச்சமயம், எதிரிகளில் ஒருவன் இரக்கமற்றவன் குபைபை நோக்கிப் பேசுகின்றான். "குபைப்! இந்த வேளையில் இந்த இடத்தில் உமக்குப் பதிலாக முஹம்மத் இருந்து, நீர் தப்பித்துவிட்டால் நல்லதென்று நீர் விரும்புவீரல்லவா?" எனக் கேட்டான். அதற்கு அந்த வீரபுருடர் சத்தியத் தியாகி — என்ன சொல்லுகிறார்? ஈட்டிகளும் அம்புகளும் அவரது உடலைப் பிளந்தன; அப்போது அவர் ஒன்றும் கூறவில்லை. வாய் திறக்க வில்லை; ஆனால், இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறாமல் அவரால் இருக்க முடியவில்லை. அவரது நாவிலிருந்து இந்தப் பொன் மொழிகள் பிறந்தன:—

"ஏ, கொடுமைக்காரனே! நான் என் உயிரை அர்ப்பணஞ் செய்ய ஆசைப்படுகிறேன்! ஆனால், இறைவனுடைய தூதராகிய எம்பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களுடைய காலிலே ஒரு முள்தைக்கவும் நான் பிரியப்படமாட்டேன். இதை ஆண்டவன் அறிவான்!" என்றார். அந்த வீர புருடரைச் சூழ்ந்து பகைவர் பலர் எட்டுத்திக்கிலும் நின்றுகொண்டிருந் தார்கள். வேடிக்கை பார்க்கப் பல பெண்களும் வந்திருந்தார்கள்.

அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிகின்றது. ஆனால், மனமோ மலைபோன்றது. ஆடாமல், அசையாமல், ஒரே ஆண்டவனுடைய நம்பிக்கையில் உறுதியாக நிற்கின்றது. "மரணத்தை வரவேற்பேன். ஆனால், இஸ்லாம் மார்க்கத்தை விடமாட்டேன்" என்கின்றது. எதிரிகளிடம் மன்னிப்புக் கோர வில்லை. மன்றாடவில்லை. புகலிடம் கேட்கவில்லை. கெஞ்சவில்லை. கதறவில்லை "எவர் முன்னிலையிலும் தலை சாய்க்கமாட்டேன். எனக்கு அச்சமென்பதே இல்லை. ஏனென்றால், நான் இப்பொழுது ஆண்டவனிடம் செல்கின்றேன் என்பதை நான் அறிவேன். நான் ஒரு முஸ்லிம். மரணத்திற்குப் பயந்தவனல்லன். மரணம் ஒரு நாள் வந்தேதீரும். நான் பயப்படுவதெல்லாம் நரகத்தின் நெருப்பு ஒன்றிற்கே. ஆண்டவன் என்னுடைய பொறுமையைச் சோதிக் கின்றான். ஹா! பகைவர் இப்பொழுது என்னுடைய மேனியைத்

துண்டு துண்டாக்குகின்றார்கள்! எனக்கு ஆண்டவன்மீது முழு நம்பிக்கை இருக்கின்றது. ஆண்டவனே! இன்று இவர்கள் செய்வதை என் நபிபெருமானாருக்குத் தெரிவித்துவிடு!'' இவ்வாறு கூறிக்கொண்டு குபைப் ஆண்டவனிடம் தமது உயிரை ஒப்புவித்தார்.

எம்பெருமானார் இஸ்லாம் மார்க்கத்தை உபதேசித்தபொழுது அதை ஒப்புக்கொண்டோர் மக்காவில் பொன்னையும் பொருளை யும், தாயையும், சேயையும், இறுதியாகத் தங்களது அருமையான உயிரையும் இழந்தார்கள். ஹஸ்ரத் குபைப் வரலாறு போன்ற இன்னொரு துயரமான வாழ்க்கை வரலாற்றைப் பாருங்கள்!

அந்தத் தோழர்தான் அப்துல்லாஹ் துல் பஜாதைன் ரயியல்லாஹு அன்ஹு. அவர் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதற்காக எல்லாவற்றையும் இழந்தார். அவர் உடலை — மானத்தை மறைத்திருந்த ஆடையையும் — பிடுங்கிக் கொண்டு அவரை நிர்வாணமாகத் துரத்திவிட்டார்கள்!

அவரது அசல் பெயர் அப்துல் உஸ்ஸா (Abdul uzza) தகப்பனார் இளமையில் இறந்தார். எனவே, அவர் தமது சிறிய தகப்பனாரின் பாதுகாவலில் இருந்தார். ஏராளமான செல்வத்திற்கு அதிபதியானார். இஸ்லாமிய பிரச்சாரம் நடந்தது. அப்துல் உஸ்ஸா அதன் உண்மையை உணர்ந்தார். எனவே, தாமும் முஸ்லிமாகிவிட விரும்பினார். எனினும், தமது சிறிய தகப்பனாரும் முஸ்லிமாவார் என்று எதிர்பார்த்தார். தாமதஞ் செய்தார். சிறிய தகப்பனாருக்குப் பயந்தார். காத்திருந்தார். இறுதியாக, மக்கா நகர் முஸ்லிம்களால் வெல்லப்பட்டதையும் அதற்குப் பிறகு இஸ்லாமியப் பூங்காவில் நறுமணம் பெருகி நாற்புறமும் பரவுவதை யும் கண்டார்!

இனி, பொறுக்க முடியாதென முடிவு செய்தார். தமது சிறிய தகப்பனாரிடம் சென்றார், "சிறிய பிதாவே! எனக்கு

வயதாகிவிட்டது. நான் இறந்துபோவேன். நான் உங்களுக்காகக் காத்திருந்தேன். ஆனால், நீங்கள் மனம் மாறவில்லை. எனவே, நான் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன்'' என்றார்.

"இஸ்லாம்" என்ற வார்த்தையைக் கேட்டவுடன் சிறிய தகப்பனாருக்குக் கடுங்கோபம் பிறந்துவிட்டது. "என்ன சொன்னாய்? அப்படியானால், நான் உன்னை நிர்வாணமாக்குவேன்? பிறகு, இங்கிருந்து துரத்தி விடுவேன்'' என்றார். சீற்றங்கொண்டார்.

"சிறிய பிதாவே! நான் கட்டாயம் முஸ்லிமாவேன். ஆண்டவன் அல்லாதவற்றை—பல தெய்வங்களை—கற்சிலைகளை—வணங்கமாட்டேன். எப்படியாயினும், ஒருநாள் எனக்கு மரணம் வருவது நிச்சயம். அதற்கு முன்னரே நான்இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்தத் தீர்மானத்தை மாற்றமுடியாது" என்றார் அப்துல் உஸ்ஸா.

இதைக்கேட்டார் சிறிய தகப்பனார். அப்துல் உஸ்ஸா உடுத்தியிருந்த ஆடைகளைப் பிடுங்கினார்! பாதரட்சைகள், மேலங்கி, தலைப்பாகை,-இறுதியாக இடுப்பில் கட்டியிருந்த துணியையும் பிடுங்கினார்! நிர்வாணமாக்கித் துரத்திவிட்டார்!

அப்துல் உஸ்ஸா,' அந்த நிலையில் அங்கிருந்து தமது தாயிடம் சென்றார். மகன் நிர்வாணமாக வந்ததைக் கண்டு, தாயார் கண்களை மூடிக்கொண்டு, அதற்குக் காரணம் என்னவென்று கேட்டார். "அம்மா! நான் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துகொண்டேன்' ஒரே ஆண்டவனைத் தொழுகிறேன். எனக்கு ஆண்டவன் ஒருவனே போதுமானவன். பொன்னும் பொருளும், சொத்தும் சுகமும் வேண்டேன்'' என நடந்த செய்தியைக் கூறினார்.

"நீ இப்பொழுது என்ன உத்தேசம் செய்திருக்கின்றாய்?' என்று தயார் கேட்கவும், "நான் எம்பிரான் முஹம்மத்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் செல்கின்றேன். எனக்கு உடலை மறைக்க ஓர் ஆடை வேண்டும்'' என்றார்.

உடனே, தாயார் ஒரு கம்பளித்துணி கொடுத்தார். அதை உடுத்திக்கொண்டு அப்துல் உஸ்ஸா, நேராக மதீனாவுக்கு வந்தார். அவர் மதீனாவுக்கு வந்துசேர்ந்த பொழுது இரவு வேளையாயிருந்தது. உடம்பெல்லாம் புழுதி படிந்த ஒருவர் இரவில் மஸ்ஜிதே நபவீ என்னும் பள்ளிவாயிலில் வருகிறார்! அங்கு தொழுவதற்காக மக்கள் ஒவ்வொருவராக வருகிறார்கள். இறுதியாக நபிபெருமானார வர்களும் வருகிறார்கள். அப்துல் உஸ்ஸாவையே பெருமானாரவர்கள் முதலில் பார்க்கிறார்கள். "நீர் யார்?'' எனப் பெருமானாரவர்கள் கேட்க, "நான் ஒரு முஸாபிர் (வழிப்போக்கன்). ஓர் ஏழை. என் பெயர் அப்துல் உஸ்ஸா'' என அவர் மறுமொழி கூறினார்.

"எங்களுடன் வசிக்கலாம். பள்ளிவாயிலில் தங்கலாம்'' எனக் கூறிப் பெருமானாரவர்கள் அவருக்கு "அப்துல்லாஹ்'' எனப் பெயரிட்டார்கள். பிறகு, அஸ்ஹாபுஸ் ஸுப்பாஹ் (Ashaab-us-suffah) என்ற திண்ணைத் தோழர்களுடன் வசிக்கும்படி வசதிசெய்தார்கள்.

அப்துல்லாஹ் குர்ஆனை ஓத ஆரம்பித்தார். திருமறையின் ஒவ்வொரு வாக்கியத்தையும் நன்கு ஆராய்ந்தார். எப்பொழுதும் குர்ஆன் ஓதிக்கொண்டிருப்பார். ஒருசமயம் ஹஸ்ரத் உமர் அவரை; "நீர் குர்ஆன் ஓதும்பொழுது மற்றவர்களுடைய தொழுகை கலைந்துவிடும்படியாக அவ்வளவு சப்தமாக ஓதவேண்டாம்'' என்றார். இதைக்கேட்டு எம்பெருமானார், "உமரே! இவர் தமது விருப்பப்படி செய்யட்டும். இவர் அவ்வாறே செய்யும்படி இவரை விட்டுவிடும். இந்த மனிதர் ஆண்டவனுக்காக எல்லாவற்றையும் தியாகஞ் செய்துவிட்டவர்'' என்றார்கள்.

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு! ரஜப் மாதம் பிறந்தது! ரோம ராஜ்யச் சேனையும், அவர்களுடன் ஸிரியா எல்லையிலிருந்த

கிறிஸ்தவக் கோத்திரங்களும் சேர்ந்து இஸ்லாமியக் குடியரசைத் தாக்க வருவதாகச் செய்தி வந்தது. இது ஒரு பேராபத்து! எதிரிகள் மதீனுவுக்கே வந்துவிடுவார்கள் என்றும் வதந்தி! எனவே இந்த எதிர்ப்பைத் தடுக்க, தற்காப்பிற்காக யுத்தத் தயாரிப்புகள் செய்யப்பட்டன! ஒவ்வாரு முஸ்லிமும் உதவி செய்ய வேண்டுமென்று பெருமானாரவர்கள் அறிக்கையிட்டார்கள். ஹஜ்ரத்உஸ்மான் (ரலி) 2,900 ஒட்டகங்களும், நூறு குதிரைகளும், ஆயிரம் தீனார்களும் கொடுத்தார். ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்(ரலி) நாற்பதாயிரம் திர்ஹம் கொடுத்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) தமது சொத்தில் பாதியைக் கொடுத்தார். ஹஸ்ரத் அபூபக்ர்(ரலி) தம்மிடமிருந்த எல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டார். அப்பொழுது ஹஸ்ரத் அபூபக்ரை நோக்கி, "வீட்டில் என்ன வைத்துவிட்டு வந்தீர்?" என்று பெருமானார் விசாரிக்க, "ஆண்டவனையும் இறை தூதரையும் வீட்டில் வைத்துவிட்டு வந்தேன்!" என்று ஹஸ்ரத் அபூ பக்ர் மறுமொழி கூறினார்.

ஆனால், நம்முடைய அப்துல்லாஹ் என்ன கொடுத்தார்? அவரிடம் பணமும், பொருளும் கிடையாது. தம்முடைய உயிரைக் கொண்டுவந்து கொடுத்தார்! எல்லாரும் மதீனுவிலிருந்து புறப்பட்டார். வெயிலின் கொடுமை! ஆகாராதிகள் குறைவு! ஏறிச்செல்ல வாகனங்கள் மிகக் குறைவு! சில சமயம் மரங்களின் இலைகளையும் புசித்தார்கள். ஆனால், அப்துல்லாஹ்வுக்கு அளவு கடந்த ஆவேசம்! இறைவன் பாதையில் உயிர்விட அவ்வளவு ஆசை! இஸ்லாத்திற்காக உயிர் வாழவேண்டும். இஸ்லாத்திற்காக உயிர்விடவேண்டும் என்ற மனவுறுதி, அவர் நபிபெருமானாரவர்களிடம் வந்தார். "இறைவனுடைய தூதரே! நான் இறைநெறியில். புனிதப்போரில், உயிர்துறக்கும்படி (ஷஹீத்) ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே, எம்பிரான் பிரார்த்தித்தார்கள். "ஆண்டவனே, காபிர்களுடைய இரத்தத்தை அப்துல்லாஹ்வுக்கு (ஹராம்) விலக்கப்பட்டதாக்கிவிடு" என்றூர்கள். இதைக் கேட்டு, அப்துல்லாஹ் ஆச்சரியப்பட்டார்! "எம்பிரானே! நான் ஷஹீத் (இறை நெறி

யில் உயிரை அர்ப்பணம் செய்தல்) என்ற உன்னத நிலைமை வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்!" என்று தமது ஆசையைத் தெரிவித்தார்.

அப்பொழுது, நபிபெருமானார், "காய்ச்சலால் இறந்தாலும் நீர் "ஷஹீத்" என்னும் உன்னதப்பதவி அடைவீர்" என்றார்கள்.

இஸ்லாமிய சேனை தபூக் (Tabuk) என்னுமிடத்திற்குச் சென்றது. அப்துல்லாஹ்வுக்குக் காய்ச்சல் வந்தது. முடிவும் வந்தது இதை எம்பிரான் அறிந்தார்கள். தங்களது தோழர்களுடன் வந்தார்கள். அப்பொழுது இரவு நேரம். ஹஸ்ரத் பிலால் (ரலி) ஒரு விளக்குடன் வந்தார். எம்பெருமானார் புதை குழியில் இறங்கி நின்றுகொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) இவ்விருவரும் பிரேதத்தை புதைகுழியில் இறக்கினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் உமரை நோக்கி எம்பெருமானார், "உம்முடைய சகோதரரை வெகு மரியாதையுடன் இறக்கும்" என்றார்கள்.

உடலைப் புதைகுழியில் வைத்தபிறகு திரு நபியவர்கள் தங்கள் கைகளால் செங்கல்லை அடுக்கினார்கள். புதைகுழியை மூடினார்கள். "ஆண்டவனே! இன்று மாலையில் இறந்த இந்த மனிதருடன் நான் பொருந்திக் கொண்டேன். நீயும் பொருந்திக்கொள்வாயாக!" என்று பிரார்த்தனை செய்தார்கள்!

இத்தகைய துன்பங்களை அனுபவித்த ஆரம்ப முஸ்லிம்களின் வரலாற்றை ஆயிரமாயிரம் பக்கங்களில் எழுதலாம். அந்தச் சோகக் கதைகளில் ஒன்றே ஸைய்யிதினா ஹஸ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகும்.

## 2. இளமையும் இருளும்

நபி பெருமானாரவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைப் போதித்தபொழுது, அடிமைகளில் முதலாவது இஸ்லாத்தை

ஏற்றுக்கொண்டவர் ஹஸ்ரத் பிலால். நபிபெருமானரவர் களால் இஸ்லாமிய வணக்கத்திற்கு அழைப்பதற்காக நிய மிக்கப்பட்ட முஅத்தின் ஹஸ்ரத் பிலால். இன்று ஐங்காலப் பிரார்த்தனைக்காக உலகிலே. "அல்லாஹு அக்பர்" என்று தொடங்கும் அழைப்பு ஒவ்வொரு பள்ளிவாயிலி லிருந்தும் வானில் எழுந்து உலகைச் சுற்றிச் சுற்றி வருகின்றது. "பாங்கு" என்ற இந்த அழைப்பு விடுப்ப வரின் பணியை எம்பிரான் மிகவும் புகழ்ந்திருக்கின்றார்கள். அப்பணியில் முதற் பங்கெடுத்த பெருமை ஹஜ்ரத் பிலாலுக்கே உரியது.

ஹஸ்ரத் பிலால் அரபியரல்லர். அபிஸீனியா நாட்டைச் சேர்ந்தவர். அந்நாட்டை அரபியர் "ஹபஷ்" (Habash) என்பர். ஹபஷீ என்றால் அபிஸீனியர் என்று பொருள். அவரது குடும்பத்தார் அடிமைகளாயிருந்தார்கள். அவர் அடிமை யாகவே பிறந்தார். மாதாவின் பெயர் ஹமாமா. பிதாவின் பெயர் ரப்பாஹ். அவரது சகோதரர் பெயர் காலித். இரு சகோதரர்களும் மக்கா நகரில் அடிமைகளாக இருந்தார்கள். இருவரும் அப்பால் முஸ்லிமானார்கள். இருவரும் நாயகத் தோழர்களானார்கள். இருவரும் இஸ்லாம் மார்க்கத்திற்காகப் பாடுபட்டார்கள். இருவரும் ஸிரியாவில் இஸ்லாமியப் போர் களில் கலந்துகொண்டார்கள். இருவரும் அங்கு மரண மடைந்தார்கள்.

"அரபியர்களில் நானே முதல் முஸ்லிம். ரோமர்களில் ஸுஹைப் முதல் முஸ்லிம் ஈரானியரில் ஸல்மான் முதல் முஸ்லிம். அபிஸீனியரில் பிலால் முதல் முஸ்லிம்" என்பது பெருமானரவர்களது திருமொழி.

பிலால் கோதுமை நிறங்கலந்த கறநிறமுள்ளவர். ஆனால், அவரது உள்ளம் தூய்மையானது. கண்ணாடி

போன்றது. கண்கள் சிவப்பு நிற்முள்ளவை. உயரமானவர். மெலிந்த உடல், தலையில் அடர்ந்த உரோமம் அவரது குரல் வெகுதூரம் செல்லக்கூடியது. இனிமையானது. அவர் மக்களைத் தொழுகைக்கு அழைப்பதற்காக “பாங்கு” சொல்லும் பொழுது வானெங்கும் மணியோசை போன்று அவரது குரலின் அலைகள் அடுக்கடுக்காகப் பரவிவிடும். அவரது பாங்கு அழைப்பானது அதைக் கேட்போர் உள்ளத்தை அப்படியே ஆண்டவன் பக்கம் திருப்பிவிடும். அவரது குரலில் ஏதோ ஒரு தனியான காந்தசக்தி இருந்தது. இறைவன் இப்பணி செய்வதற்காக அவரது குரலை இவ்வாறு அற்புதமாக அமைத்தான் போலும்!

பிலால் மக்கா நகரில் பிறந்தார். அபூ அப்துல்லாஹ் என்பது அவரது மறு பெயர். இளமையில் மக்கா நகரிலே அடிமையாயிருந்தார். உமய்யாபின் கலப் (Khalaf) என்பவர் அவரது எஜமான். விக்கிரக வணக்கமும் அஞ்ஞானமும் நிறைந்த சூழ்நிலையில் பிலால் வளர்ந்தார். அவரது இளமையும் வாலிபப் பருவமும் இவ்வாறே கழிந்தன.

அவருக்கு வயது முப்பத்தேழாயிற்று. அப்பொழுது தான் “அல்லாஹ்” என்ற வார்த்தை முதலாவதாக அவர் காதில் விழுந்தது. இந்த வார்த்தை நபிபெருமானார், இறுதி யான இறை தூதர், முஹம்மதுத் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் மூலமாக வந்தது. அரபியருக்கு இந்த வார்த்தையானது புதுமையாயிருந்தது. நபிநாதருடைய சங்க நாதம் அவர்களுக்கு நவீனமாகத் தோன்றியது.

ஏன் நவீனமாகாது? வெகு காலமாக அரபியர் விக்கிரக வணக்கஞ்செய்து வந்தார்கள். வீட்டுக்கொரு தெய்வம்! “இறைவன் ஒருவன். அவன் இணையற்றவன். அவன் எவருக்கும் தகப்பனல்லன். எவருக்கும் மகனல்லன்.” என்பதை அவர்கள் நம்ப முடியவில்லை. ஏக தெய்வக் கொள்கையை அவர்கள் எவ்வாறு ஒப்புக்கொள்வர்? எனவே, இந்தப் புதிய தூதிற்கு விரோதமாகப் படையெடுத்தார்கள்.

அதை எதிர்த்தார்கள். அதைக் கொண்டுவந்த நபியையும் தாக்கினார்கள்.

இச் சூழ்நிலையிலே, இந்த இருளிலும் ஒளியைக் கண்டோரும் இருந்தனர். பொய்யினின்று மெய்யை அறியக் கூடிய திறமைசாலிகளும் அறிவாளிகளும் இருந்தனர். எனவே, அத்தகைய மெய்யறிவுடையோர் திருநபியவர்களின் திவ்ய செய்தியை உள்ளன்புடன் ஒப்புக்கொண்டு, பலதெய்வ வணக்கத்தை விட்டுவிட்டார்கள். "இஸ்லாம்" என்ற இந்தப் புதிய பேரொளியால் தங்கள் ஆத்மாக்களுக்குப் பிரகாசம் அருளும் பாக்கியம் பெற்றார்கள். அவர்களில் ஒருவரே பிலால்.

பிலால், எம்பிரானது அழைப்பைக் கேட்டார். உடனே அதற்குத் தலைசாய்த்தார். அவரது உள்ளம் இஸ்லாமிய ஜோதியால் பிரகாசமடைந்தது. குடும்பப் பெருமையும் கர்வ போதையும் கொண்ட குரைஷிகளின் உள்ளத்தில் இருள் நிறைந்திருந்தது. ஆனால், இந்தக் கருநிற வாலிபர் இருளையும் மருளையும் நீக்கி, ஒளி பெற்று இறைதூதரின் பேரன்பிற்குப் பெரிய எடுத்துக்காட்டாக விளங்கினார். அப்பொழுது எட்டுப்பேர் இஸ்லாமியத் தூதை ஒப்புக்கொண்டிருந்தார்கள்.

பெருமானாரவர்களுடைய அழைப்பின் காரணமாக மக்களது உள்ளங்களில் மாறுபாடு உண்டாயிற்று. அவர்களது ஆத்மீக வாழ்க்கையில் பெரும் புரட்சி ஏற்பட்டது. கற்சிலை வணக்கத்தை விட்டார்கள். எம்பிரானவர்கள் அந்த மக்களை நோக்கி, "ஆராய்ந்து பாருங்கள். நீங்கள் வணங்கும் இந்த விக்கிரகங்கள் பயனற்றவை! ஒன்றுக்கும் உதவாது! அவற்றால் உங்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படாது! மேலும், அவற்றால் உங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யமுடியாது! தங்கள் மீது உட்காருகின்ற ஈக்களைத் துரத்தவும் இந்த விக்கிரகங்களால் முடியவில்லையே! சூரியனைப் பாருங்கள்! சந்திரனைப் பாருங்கள்! நட்சத்திரங்

களை நோக்குங்கள்! காற்றைக் கவனியுங்கள்! கடலை, வானத்தை, பறவைகளை, மிருகங்களைப் பாருங்கள்! இவை அனைத்தும் சுவாதீனம் உள்ளன அல்ல! இவை உங்களைக் காப்பாற்றமுடியாது! இவை அனைத்தையும் படைத்தவன் இறைவனே. இவற்றை இறைவன் எதற்காக படைத்தான்? மனிதனுக்குப் பணியாற்றவே! மனிதனே சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் மேலானவன்! மனிதனே இறைவனுடைய பிரதிநிதி! இந்தச் சிருஷ்டிகள் எல்லாம் மனிதனுடைய வேலைக்காரர்களே. எனவே, தன்னுடைய பணியாளர்களை வணங்குவது மனிதனுக்கு வெட்கமான காரியமல்லவா? அவமானமல்லவா? மனிதனுடைய உயர்பதவிக்கு இழுக்கல்லவா? மக்களே! நீங்கள் உங்களுடைய பணியாளர்களைக் கடவுளாக்கி விட்டீர்களே! இது உண்மைக்கு விரோதமாக இருக்கிற தல்லவா?" என்றார்கள்.

தலைமுறை தலைமுறையாக வந்த பழக்க வழக்கங்களை மனிதன் தன் நெடுஞ்சோடு அணைத்து அஞ்ஞான இருளில் வசிக்கின்றான். புராதனச் சடங்குகளை விட்டுவிட அவன் சம்மதிப்பதில்லை. எனவே தனது மூதாதைகளுடைய பழக்க வழக்கங்களையும் கொள்கைகளையும் எவராயினும் எதிர்த்தால் அந்த மனிதரை, அந்த மகானைத் தனது விரோதியாகவே எண்ணுகின்றான். இது உலகில் அன்றும், இன்றும், என்றும் நடக்கின்றது. நடந்துகொண்டே யிருக்கின்றது.

மக்கா வாசிகளும் இவ்வாறே செய்தார்கள். நபிகள் நாதருடைய தூது சர்வ சாதாரணமான தூது! சிக்கலொன்றும் இல்லாத தூது! எளிய நற்செய்தி! தூய்மையான தூது! உண்மையான அழைப்பு! ஆனால், மக்கா வாசிகள் அதை அறியவில்லை. அறியாமையால் இஸ்லாம் மார்க்கத்தையும் அதை உபதேசித்த இறைதூதரையும் எதிர்த்தார்கள். "இறைவன் ஒருவனே" என்னும் உயர்ந்த கொள்கையை அவர்கள் ஒப்புக் கொள்ள மறுத்தார்கள்.

## 3. முஸ்லிமாதல்

மண்ணினைக் கல்லதனைச் செம்பினை
வடிவஞ் செய்து வைத்து
பண்ணிடும் பூசையாலே—யாதுமோர்
பலனடை வதுமுண்டோ? (கவிமணி)

துவக்கத்தில் எம்பிரான் இஸ்லாமியப் பிரச்சாரத்தை இரகசியமாகவே செய்தார்கள். அபூ லஹப், அபூ ஜஹ்ல் போன்ற எம்பிரானுடைய நெருங்கிய உறவினரும் அந்த அழைப்பை விரும்பவில்லை. இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட ஒரு சில முஸ்லிம்கள் துன்பத்திற்கு ஆளானார்கள். முதியோரில் முதலாவது ஹஸ்ரத் அபூ பக்ர் முஸ்லிமானர். அவர் பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவர். பணக்காரர். ஆகையால், எதிரிகள் அவரைத் தாக்கவில்லை. பெண்களில் முதலாவது கதீஜா பிராட்டியார் முஸ்லிமானர். ஹஸ்ரத் கதீஜா நாயகியும் உயர்ந்த குடும்பத்திற் பிறந்து பணம்படைத்த சீமாட்டி. ஆகவே, அவரையும் எதிரிகள் விட்டுவிட்டார்கள். சிறுவர்களில் முதலாவது ஹஸ்ரத் அலீ முஸ்லிமானர். அவர் மக்காவில் உயர்ந்த ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்தோர். ஆதலால், அவரையும் தொந்தரவுசெய்யவில்லை. அடிமைகளில் ஹஸ்ரத் ஜைத் (Zaid) முஸ்லிமாகி இருந்தார். ஆனல், அவர் விடுதலை யடைந்து விட்டார். எனவே, அவரும் தப்பிவிட்டார்.

ஆனல், பிலால் முஸ்லிமாகியும் அடிமையாகவே இருந்தார். அவரது எஜமான் முஸ்லிம்மல்லாதவர். இஸ்லாமை வெறுப்பவர். முஸ்லிம்களை முற்ற முற்றப் பகைப்பவர். ஆகவே, தமது வெறுப்பையும், பகைமையையும், கோபத்தையும் பிலால்மீது வெளியிட்டார். பூனையின் வாயில் அகப்பட்ட எலியைப்போன்று, பாம்பின் வாயில் அகப்பட்ட தேரைபோன்று, புலியின் வாயில் சிக்கிய ஆட்டைப் போன்று தவித்தார் பிலால்! உலகில் எளியோரை வலியோர் துன்புறுத்துவதுண்டு, சீற்றங் கொள்வதும் உண்டு.

அரபிய மணல்வெளி சாதாரணமானதா? செந்நெல் வயல்கள், சோலைகள், நதிகள், இயற்கை எழில்கள் கிடை யாது! வானத்திலிருந்து மழை பெய்யாது ஆனால் வெப் பமே சொரியும்! மண்ணும் கனல் எழுப்பும்! எங்கும் தணலே நிறைந்திருக்கும்! நிழலென்பதே மருந்துக்கும் கிடையாது! அடி எடுத்துவைத்தால் பாதங்கள் நெருப்பிலபட்டதுபோல் சுடும்! குதித்து ஓடிப்போகலாமென்ற உணர்வு தோன்றும்! காலடிவைத்த இடமெல்லாம் நெருப்புப் படுக்கையாகவே இருக்கும்! அதை நினைக்கும்போதே நமது உள்ளம் துடிக்கின்றது. இத்தகைய பாலைவன மணலிலே, நடுப்பகலிலே, இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்ட ஏழைகளும் அடிமைகளும் கயிற்றால் கட்டப்பட்டுக் கிடத்தப்பட்டார்கள்! சூடான கற்கள் அவர்கள்மீது வைக்கப்பட்டன! 'தண்ணீரும் கொடுக்கப்படவில்லை! தலைகீழாகத் தொங்கவிடப்பட்டார்கள்! கைகால்களைக் கட்டி "கொடும்பாவி" இழுப்பதைப்போல் கயிறுகளால் கட்டி, குழந்தைகளை ஏவி அந்த முஸ்லிம்களைத் தெருத்தெருவாக இழுத்துச் சென்றார்கள்!

பிலால் முஸ்லிமானார் எனக் கேள்விப்பட்ட அவரது எஜமான், உமய்யா பின் கல்ப் சீற்றங்கொண்டார். சின்னஞ்சிறு பிள்ளைகளை அழைத்தார். பிலாலைக் கயிற்றால் கட்டினார். அவர்கள் மக்கா நகரத் தெருக்களில் "கொடும்பாவி" கட்டி இழுப்பதைப்போன்று அவரது உடலை இழுத்துக் கொண்டுசென்றார்கள். பட்டினி போட்டார். பசியால் வாட்டினார். தாகத்தால் தவிக்கச் செய்தார். கசையடி அடித்தார். சிலசமயம் பகலில் சுடு மணலில் பிலாலை மாட்டுத் தோலால் சுருட்டிக் கட்டிவிடுவார். சில சமயம் இரும்புக் கவசத்தில் பூட்டிக் கடுமையான வெயிலில் உட்கார வைப்பார். "லாத்உஸ்ஸா இவையே உன்னுடைய தெய்வங்கள். உன் அல்லாஹ் எங்கிருக்கிறான்?" எனக்கேட்பார். இரவில் பனியிலும், நடுப்பகலில் பாலையில் கொதிக்கின்ற சரளைக் கற்கள் மீது நிர்வாணமாகக் கிடத்தப்பட்டார். என்ன செய்வார் பிலால்?

மத்தியான வெயில்! முதுகோ சுடுமணலில் வெந்து கொண்டிருக்கின்றது! நெஞ்சின்மீது கனத்த சூடான கல் அழுத்துகின்றது! வசைமாரி பொழிகின்றது! தாங்கமுடியாமல் பிலால் மயக்கமுற்றுவிடுவார்!

அச்சமயம், இரக்கமற்ற அவரது எஜமான் வருவார். விக்கிரகங்களையே வணங்கும்படி கூறுவார். "பிலாலே! முஹம்மதுடைய ஆண்டவனை விட்டுவிடு!" என்பார். அப்பொழுது மக்காவில் ஒரே தெய்வக் கொள்கையைப் பலர் எதிர்த்தார்கள். ஆனால், அவர்கள் அனைவரிலும், அந்த உமய்யா பின் கல்ப் என்பவரே முஸ்லிம்களுக்குத் துன்பம் செய்வதில் முதலிடம் பெற்றார். புதிய புதிய முறைகளைக் கையாண்டு பொதுவாக முஸ்லிம்களுக்கும், குறிப்பாக அவரிடம் அடிமையாயிருந்த பிலாலுக்கும் விதவிதமான துன்பங்களைக் கொடுத்தார். பாலைக் காய்ச்சக் காய்ச்ச இனிமை தரும். சங்கு சுடப்பட்டால்தான் வெண்மை தரும். கண்ணாடி தேய்க்கப்பட்டால்தான் முகம் காட்டும். பிலாலின் மார்புக்குள் சிறிய இறைச்சித் துண்டாக இருந்த அவரது உள்ளம் இமயம்போல் கம்பீரமாகவும், உறுதியுடனும் இருந்தது. ஆத்மீக வெள்ளம் பெருகியது. ஜீவ ஊற்றுப் பொங்கியது. கடுஞ் சோதனைகளும், அந்த இறைநேசக்கர்மவீரர், "அஹத்! அஹத்! ஆண்டவன் ஒருவனே!" என்பார். உண்மையான பக்தர்களுக்குத் துன்பம் வந்த காலையில் அவர்களது இறைபக்தி அதிகமாகுமேயன்றிக் குறையாது. துன்பம் கொடுப்போரை அவர்கள் தங்களது ஆண்டவனை நினைப்பூட்டும் நல்ல கருவிகளாகவே எண்ணுவார்கள். இறைநேசர் இப்ராஹீம் நபியவர்கள், நம்ரூத் என்னும் அரசனால் ஏக கொள்கையின் காரணமாக நெருப்பில் கிடத்தப்பட்ட பொழுது, எவரையும் பகைக்கவில்லை! நிந்திக்கவில்லை! எவரது உதவியையும் நாடவில்லை! இறைநேச இன்பத்தில் ஆழ்ந்து, "இறைவனது இச்சைப் படியே இப்ராஹீம் நடப்பான்" என்றார்கள் அல்லவா?

ஏழைகளும் அடிமைகளும் இம்சிக்கப்படுவதைக் கண்டு பெருமானாரவர்கள் துயரப்படுவார்கள். பிலால் ஒருநாள்

எம்பிரானிடம் வந்து. "எனக்கு உதவி செய்யுங்கள்!" என விண்ணப்பஞ் செய்தார். பெருமானாரவர்கள் பிலாலுக்கு ஆறுதல் அளித்தார்கள். இம்மாதிரியாகவே, இதர ஏழைகளுக்கும் அடிமைகளுக்கும் ஆறுதல் வார்த்தை கூறினார்கள். உலகிலே, ஏக தெய்வக் கொள்கையை-இஸ்லாமை- உபதேசித்த நபிமார்களெல்லாம் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களோ அளவு கடந்தவை, வர்ணனைக்கு அப்பாற்பட்டவை. அந்தக் கஷ்ட நிஷ்டூரங்களுக்கு முன், மக்கா வாசிகளால் ஏற்பட்ட துன்பமும் துயரமும் சிறு துரும்பெனவே கூறலாம். "அக்காலத்திலே மெய்யடியார்கள் நெருப்பிலிட்டுக் கொல்லப்பட்டார்கள்! இரும்புச் சீப்புகளினால் அவர்களது தசைகள் சீவி எறியப்பட்டன! ரம்பத்தால் அறுக்கப்பட்டார்கள்! தூக்கிலிடப்பட்டார்கள்! சித்திரவதை செய்யப்பட்டரார்கள்!" என எம்பிரான் சமாதானம் சொல்லுவார்கள்.

என்றாலும், நெடுநாட்களாகத் தங்கள் சீடர்கள் துன்பப்படுவதை எம்பிரானால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை ஆப்த நண்பர், ஹஸ்ரத் அபூ பக்கரிடம் ஒரு நாள் "நம்மிடம் பணமிருந்தால் பிலாலை விடுதலை செய்விக்கலாம்" என்றார்கள். உடனே, ஹஸ்ரத் அபூ பக்ர், பிலாலுடைய எஜமானிடம் சென்று அவரை விடுதலைசெய்யும்படி கேட்டுக்கொண்டார். உமய்யா கல்நெஞ்சமும் பேராசையும் உள்ளவர். எனவே, "அப்படியானால், அதிகத் தொகை கொடுக்கவேண்டும்!" என்றார் உமய்யா. ஹஸ்ரத் அபூ பக்ர் பணத்தைக் கொடுத்து, பிலாலை விடுதலைசெய்து பெருமானாரிடம் கொண்டு வந்தார்.

அன்றுமுதல், பிலால் எம்பிரானுடன் வசித்துப் பணியாற்றி வந்தார். இனிமேல், ஆண்டவனை நினைப்பதும் பெருமானாருக்குக் கீழ்ப்படிவதையும் தவிர பிலாலுக்கு வேறு வேலையே கிடையாது. பெருமானாருடைய இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக்கொண்டார். தாமாகவே பெருமானாரின் அடிமையாகிவிட்டார். இரவும் பகலும், காலையிலும் மாலையிலும் அவர் பெருமானாருடைய

தோழமையில் இருந்தார். அதுவே அவரது வாழ்க்கையின் பெருமையும் குறிக்கோளுமாக இருந்தது.

## 4. அவதி—ஆனால், உறுதி

இஸ்லாமை ஏற்றுக்கொண்ட ஸஹாபா-நாயகத்தோழர் களெல்லாம்-இறையச்சமும், தூய்மையான உள்ளமும் உள்ள வர்கள். இத்தகைய பளிங்குபோன்ற மனமுடையோரே நல்ல போதனைகளை உடனடியாக ஏற்றுக்கொள்வார்கள். கள்ள மனமும், கல் நெஞ்சமும் உள்ளோருக்கு என்னதான் சொன்ன லும். அவர்கள் மனதில் நல்ல போதனைகள் நுழையா. கண் இருந்தும் அவர்கள் பார்க்கமாட்டார்கள்! காது இருந்தும் கேட்கமாட்டார்கள்! அறிவு இருந்தும் அறியமாட்டார்கள்! அவர்களுடைய உள்ளங்களில் முத்திரையிடப்பட்டு, மெய் யொளி வரவிடாமல் தடுத்துக் கொள்வார்கள்! எத்தனையோ குர்ஆன் வசனங்களைக் கேட்ட பிறகும், நபிபெருமானாரின் அரிய போதனைகளைக் கேட்ட பிறகும், அவர்கள் இறைவனை நிராகரித் தார்கள்! ஆனால், ஸஹாபாக்களோ கேட்டவுடன், "லப்பைக்!" என்று கூறி இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஹஸ்ரத் உமர், நபி பெருமானாரைக் கொல்ல வாளுடன் புறப்பட்டார். ஆனால், ஒரே ஒரு குர்ஆன் வசனம் அவரது மனதை மாற்றி விட்டது. அபூதர் கப்பாரி என்பவர் தமது சகோதரர் ஓதிய ஒரு குர்ஆன் வசனத்தைக் கேட்டார். ஓடோடி வந்தார். நபி பெருமானாரைக் கண்டார்—முஸ்லிமானார். தமது கோத்திரத் தையும் இஸ்லாத்தில் சேர்த்தார். உத்மான் பின் மல்வூன் என்பவரும் ஒரேயொரு திருவசனத்தைக் கேட்டவுடன் முஸ்லிமானார். ஜபீர் பின் மத்அம் என்பவரும் ஒரு வசனம் கேட்டு மனம் மாறினார். துபைல் பின் அம்ரு என்பவர் நபி பெருமானார் ஓதிய ஒரு திருமறை வசனம் கேட்டு முஸ்லிமானார்.

மதீனாவிலிருந்த அன்ஸார்கள் முதலில்குர்ஆன் வசனங் களைக் கேட்டவுடன் முஸ்லிமானார்கள். இஸ்லாத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு அபிஸீனியாவிலிருந்து இருபது பேர் நபி

பெருமானாரிடம் வந்தார்கள். பெருமானார் குர்ஆன் ஓதினார்கள். அதைக்கேட்ட அவர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டு இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்கள். அபூ உபைதா, அபூ ஸல்மா, அர்கம் பின் அர்கம், இவர்களெல்லாம் நபி பெருமானாரிடம் வந்தார்கள். அப்பொழுது பெருமானார் அவர்களுக்கு குர்ஆன் ஓதிக்காட்டி, இஸ்லாத்தைப்பற்றி விளக்கம் செய்தவுடன் அவர்கள் முஸ்லிமானார்கள்.

இதைத்தவிர, பெருமானாரின் பெரும் பண்புகளால் எத்தனையோ பேர் முஸ்லிமானார்கள். பெருமானார் மதீனாவுக்கு வந்த பிறகு, முதல் சொற்பொழிவில், "(ஒருவருக்கொருவர்) ஸலாம் (சாந்தி) சொல்லுங்கள்! (ஏழைகளுக்கு) அன்னமிடுங்கள்! பிறர்மீது இரக்கங்கொள்ளுங்கள். தூங்கப்போகும் பொழுது இறைவணக்கம் செய்யுங்கள். இந்த நற்செயல்களுக்குப் பிரதியாக சுவர்க்கத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்" எனப் போதித்தபொழுது அப்துல்லாஹ் பின் ஸலாம் என்பவர் உடனே முஸ்லிமாகிவிட்டார்.

இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கு முன்னரே, பெருமானாரின் நண்பரான லமாத் என்பவர் வெளியூரிலிருந்து மக்காவுக்கு வந்தார். பெருமானாருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று கேள்விப்பட்டு, உடனே சென்று, "நான் பைத்தியத்திற்கு மருந்து செய்வேன்" என்றார். பெருமானார் அவரை உட்காரவைத்து, ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். அதைக் கேட்டவுடன் அவர் முஸ்லிமாகிவிட்டார்.

சிலர் பெருமானாரின் அழகிய முகத்தைக் கண்டவுடன் மனம் மாறிவிட்டார்கள். அபூ ராபீ என்பவர் குரைஷ் கோத்திரத்தாரின் வக்கீலாகப் பெருமானாரிடம் வாக்குவாதம் செய்யவந்தார்கள். ஆனால், பெருமானாரின் சுந்தர வதனத்தின் ஒளியைக் கண்டதும் முஸ்லிமாகிவிட்டார்! அப்துல்லாஹ் பின் ஸலாம் என்பவர் பெருமானாரின் முகத்தைப் பார்த்தவுடன், "பொய்யனுடைய முகம் இப்படி இராது!" என்று கூறி முஸ்லிமானார்.

சிலர் பெருமானாரைப்பற்றிக் கேள்விப்பட்டு இஸ்லாமிய குழுவில் சேர்ந்துகொண்டார்கள். அபூ மூஸா அஷ்அரி, துபைல், அபூதர், அம்ரு பின் அம்பா போன்றவர்கள் இந்த முறையை அனுசரித்தார்கள்.

இறை நம்பிக்கையில் உறுதி

இவ்வாறு இஸ்லாத்தில் சேர்ந்தோரில் பெரும்பாலோர் ஏழைகள். ஒருவேளை உணவு கிடைப்பதும் அரிதான நிலையில் உள்ளவர்கள். அவர்களை எதிர்த்தோரெல்லாம் செல்வ நிலையில் இருந்தார்கள். ஆகையால், இந்த முஸ்லிம்கள் யூதர்களிடம் கடன் வாங்குவார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலையில் இருந்த முஸ்லிம்களை அந்த யூதர்கள் பற்பலவிதமாகத் துன்பப்படுத்துவார்கள். மேலும், முஸ்லிம்கள் ஸதகா, ஜகாத், என்ற தருமங்களும் கொடுக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். இதை ஒரு சாக்குப்போக்காக வைத்துக்கொண்டு இஸ்லாத்தின் விரோதிகள் அவர்களை அழைத்து இஸ்லாத்தை விட்டுவிடும்படி போதிப்பார்கள் இதைத் தவிர, ஸஹாபாக்கள்மீது எத்தனையோ சோதனைகள்—துன்பங்கள். ஆனால், அவர்கள் இஸ்லாத்தின் மீது உறுதியுடன் இருந்தார்கள்.

தபூக் போருக்குத் தயாராகவில்லையென்று க அப் பின் மாலிக் என்னும் தோழருடன் பெருமானார் கோபித்துக் கொண்டபொழுது, எல்லாத் தோழர்களும் அவருடன் ஒத்துழையாமல் ஒதுங்கியிருந்தார்கள். அதனால். அவருக்கு எவ்வளவோ சங்கட நிலை ஏற்பட்டது.. அச்சமயம் எதிரிகளின் கஸ்ஸான் அரசர் அவரைத் தம்முடன் சேர்த்துக்கொள்ளும்படி அழைப்புவிடுத்தார். ஆனால், அவர் அந்தக் கடிதத்தை உடனே அடுப்பில் போட்டுவிட்டார்!

தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளையும் சொத்தையும் விட்டுவிட எவராவது விரும்புவதுண்டா? ஆனால், இஸ்லாத்திற்காக, நபி பெருமானாருக்கா, யாவற்றையும் மகிழ்ச்சியுடன் விட்டுவிடத் தயாரானார்கள். இஸ்லாத்தின் மீது அவர்களுக்கிருந்த பற்றின் காரணமாக அவர்கள் தங்கள்

உயிர்களையும் அர்ப்பணஞ் செய்யத் தயாராக இருந்தார்கள். கப்பாப் (Khabbab) என்னும் நாயகத் தோழருக்கு ஆஸ் பின் வாயல், என்னும் முஸ்லிமல்லாதார் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. "நீ முஹம்மதை விட்டுவிட்டால் கொடுக்கிறேன்" என்று சொல்லக்கேட்டு, கப்பாப், "இறுதித் தீர்ப்புநாள் வரையும் இது முடியாது! முடியாது!" என்று மறுமொழி கூறிவிட்டார்.

மக்காவிலிருந்து நாடுகடந்து மதீனாவுக்குச் சென்ற எல்லா முஸ்லிம்களும் தங்கள் வீடு, வயல், பொருள் எல்லாவற்றையும் விட்டுவிட்டுச் சென்றார்கள். தகப்பனுடைய சொத்துக்களுக்கு வாரிசாகக் கிடைக்கும் சொத்தையும் துறந்தார்கள். மதீனாவுக்குச் சென்ற பிறகும், ஆரம்பத்தில் பொதுவாக எல்லோருக்கும் பல துன்பங்கள் உண்டாயின. உடல் நலம் கெட்டு எல்லோரும் கஷ்டப்பட்டார்கள்.

மக்காவிலே, ஏழை முஸ்லிம்களையும் அடிமைகளையும் இறைவனை நிராகரித்தோர் துன்புறுத்தினார்கள். பிலால் என்னும் அடிமை, இரும்புக் கவசம் அணிவித்து வெயிலில் கிடத்தப்பட்டார். குன்றுகளிலும், கற்பாறைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் கொடும்பாவி இழுப்பதைப்போல் சிறுவர்கள் அவரை இழுத்துக்கொண்டு குதூகலமாகச் செல்வார்கள். கப்பாப் என்பவர் உம்மு அன்மார் என்பவருடைய அடிமை. அவர் முஸ்லிமானதைக் கேள்விப்பட்டவுடன், இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அவர் தலைமீது வைத்தார். சிலகாலம் சென்று, ஹஸ்ரத் உமர் அவருடைய முதுகைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, "இன்றுவரை இப்படிப்பட்ட முதுகை நான் பார்க்கவில்லையே!" என்றார். அப்பொழுது கப்பாப், "காபிர்கள் என்னை நெருப்பின் மீது படுக்க வைத்து, இழுத்துக்கொண்டு சென்ற அடையாளங்கள் இவை!" என்றார். இதைப்போலவே ஸுஹைப் (Suhaib) அம்மார்போன்ற அடிமைகளை இரும்புச் சட்டைகள் அணிவித்து வெயிலில் கிடத்திவிடுவார்கள். ஆனால், அவர்கள் அந்த நிலைமையிலும் இஸ்லாத்தை விட்டுவிடவில்லை.

அபூ பக்கியா (Abu Fakia] என்பவர், ஸப்வான் பின் உமய்யா (Safwan bin Umayya) என்பவரின் அடிமை. காபிர்கள் அவருடைய கால்களில் விலங்கிட்டு, வெயிலில் கிடத்திவிடுவார்கள். பிறகு, முதுகின்மீது ஒரு கல்லை வைப்பார்கள். அதனால், அவர் மயக்கமுற்றுவிடுவார். ஒரு நாள் ஸப்வான் அவருடைய காலில் விலங்கிட்டு, அவரை இழுத்துக்கொண்டு போகும்படி கட்டளையிட்டார். நடுப் பகலில் கொதிக்கும் மணலில் கிடத்தினர். அப்பொழுது தற்செயலாக ஒரு மனிதன் அந்த வழியாகச் சென்று கொண்டிருந்தான், ஸப்வான் அந்த மனிதனைச் சுட்டிக் காட்டி, "இதோ போகிற மனிதன்தான் உன் ஆண்டவனு?' என்று பரிகாசமாகக் கேட்டார். உடனே, அபூ பக்கியா "என்னுடைய ஆண்டவனும், உன்னுடைய ஆண்டவனும் அல்லாஹ்!" என்று மறுமொழி கூறினர். ஸப்வான் கோபாவேசத்துடன், அவர் தலையில் ஓங்கி அடித்தார்! அவர் கழுத்தைப் பிடித்து நெறித்தார்! அப்பொழுது அவருடைய உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிடும் நிலை ஏற்பட்டது.

அம்மார் என்னும் முஸ்லிமுடைய தாயாரின் பெயர் ஸுமைய்யா. ஒரு நாள் வழக்கம்போல் அந்த அம்மையாருக்கு இரும்புக் கவசம் அணிவித்து வெயிலில் கிடத்தினர்கள். அப்பொழுது நபிபெருமானரவர்கள் அந்த வழியாக வந்தார்கள். அந்த நிலைமையைக் கண்டார்கள். "பொறுமையுடன் இருப்பீராக! நீர் சுவர்க்கம் செல்வீர்!" என்றுரர்கள். காபிர்கள் அவர்மீது இன்னும் அதிகமாகக் கொடுமை புரிந்தார்கள். அபூ ஜஹ்ல் என்பவன் அவர் மீது ஓர் ஈட்டியால் குத்தினன். அவரைக் கொன்றுன். முஸ்லிம்களில் இறை நெறியில் இறந்த "ஷஹீத்"களில் இவரே முதலிடம் பெறுகின்றுர்.

ஹஸ்ரத் உமர் தமது சகோதரி முஸ்லிமாகிவிட்டதைக் கேட்டு, அங்கு சென்று அடித்ததில் அந்த மாதின் உடலிலிருந்து இரத்தம் வந்தது. இதைப்போன்றே லபீன (Labeena) என்பவரையும் அவர் அடிப்பார். அடித்து

அடித்து கைகளில் நோவு உண்டாகும் வரை அடித்து நிறுத்துவார். பிறகு, "நான் உன்மீது இரக்கப்பட்டேன் என்று நினையாதே. அடித்தேன், அடித்தேன், அலுத்து விட்டேன்: அதனால்தான் விட்டு விட்டேன்!" என்பார். இதைப்போன்றே ஸய்ஸா என்ற தமது குடும்ப அடிமைப் பெண்ணையும் துன்பப்படுத்துவார்.

உம்மு ஷரீக் என்னும் மாது முஸ்லிமாகிவிட்டார் என்றறிந்த அவரது உறவினர், அவரைப் பிடித்து வெயிலில் நிறுத்தி, ரொட்டியும் அதனுடன் தேன்போன்ற ஒரு காரமான வஸ்துவும் சாப்பிடும்படி கொடுப்பார்கள். ஆனால், குடிக்கத் தண்ணீர் கொடுக்கமாட்டார்கள். இவ்வாறு ஒரு நாளல்ல— மூன்று நாட்கள் கழிந்தன. அப்பொழுது அந்தப் பாதகர்கள். இஸ்லாத்தை விட்டுவிடு!" என்பார்கள். அந்த அம்மையார் அப்பொழுது உணர்விழந்த நிலையில் இருந்தார். இவர்கள் சொல்வதை அறிந்துகொள்ள முடியவில்லை. அந்தப் பகைவர்கள், வானத்தைச் சுட்டிக் காட்டினார்கள். அப பொழுதுதான் அந்த அம்மையார் அவர்களுடைய நோக்கத்தை அறிந்தார் "ஆண்டவன் மீது ஆணையாக, நான் என் இஸ்லாத்தில் உறுதியுடன் இருக்கிறேன்" என்றார்.

அபூதர் கப்பாரி என்பவர், மக்காவிலே கஃபாவில் நின்றுகொண்டு, "நான் முஸ்லிமாகி விட்டேன்!" என்று விளம்பரப்படுத்தியவுடன், காபிர்கள் அவர்மீது பாய்ந்து, அவரை இரக்கமில்லாமல் அடித்ததால், அவர் மூர்ச்சை யிழந்து பூமியில் விழுந்துவிட்டார்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் என்பவர், அதே கஃபாவில் நின்றுகொண்டு சில குர்ஆன் வசனங்களை உயர்ந்த குரலில் ஓதினர். உடனே, காபிர்கள் ஓடிவந்து அவரைத் தாக்கி, அவர் முகத்தில் காயங்கள் உண்டாகும்படி அடித்தார்கள். ஆனால், அவர் அதையும் ஏற்றுக்கொண்டு திரும்பி வந்து தமது தோழர்களிடம், "நீங்கள் விரும்பினால், நாளைக்கும்

நான் அங்கு சென்று குர்ஆன் வசனங்களை ஓதுவேன்!" என்றார்.

இவர்களெல்லாம் ஏழைகளும் அடிமைகளுமாக இருந்தார்கள். ஆதலால், இவ்வாறு தனிப்பட்ட முறையில் துன்புறுத்தப்பட்டார்கள். காபிர்கள் அவர்களை அடித்தார்கள். தண்ணீரில் கட்டித் தொங்கவிடுவார்கள். பட்டினி போடுவார்கள். பசியாலும், துன்பத்தாலும் அவர்கள் உட்காரவும் சக்தியில்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

ஏழைகள் மட்டும் இஸ்லாத்திற்காகக் கஷ்டப்படவில்லை. செல்வச் சீமான்களையும் காபிர்கள் விடவில்லை. ஹஸ்ரத் உஸ்மானை அவரது சிற்றப்பர் கயிறுகளால் கட்டினார். சவுக்கால் அடித்தார். ஸுபைர் பின் அவ்வாம் (Zubair bin Avvam) முஸ்லிமான பிறகு அவருடைய சிற்றப்பர் அவரை ஒரு பாயில் சுருட்டி, அவருடைய மூக்கில் புகையைக் காட்டித் திணறடிக்கும்படி செய்தார். ஹஸ்ரத் உமருடைய சிறிய தகப்பனுருடைய புதல்வர் ஸயீத்பின் ஸைத் (Sayeed bin Zaid) என்பவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவுடன் ஹஸ்ரத் உமர் அவரைப் பிடித்துக் கயிற்றால் கட்டிவிட்டார்! அயாஷ் பின் அபீ ரபீயா, ஸல்மா பின் ஹிஷாம் இவ்விருவரும் முஸ்லிமானபொழுது, காபிர்கள் அவ்விருவரின்கால்களையும் சேர்த்து விலங்கிட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ர் முஸ்லிமான பிறகு ஒரு நாள் தவ்ஹீத் — ஒரே தெய்வம் — என்பதைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவாற்றினார். காபிர்கள் அவரை எதிர்த்தார்கள். அடித்தார்கள். அவர் பிரேதம்போல் ஆகிவிட்டார். இறந்து விடுவார் என்று பனூதமீம் என்ற அவரது கோத்திரத்தார் நினைத்தார்கள். அவரைத் தூக்கிக்கொண்டு வீடு சென்றார்கள். பல மணி நேரங்கள் சென்று, அன்று மாலையில் கண் திறந்து பார்த்தார். நாவால் பேசினார். தமது கஷ்டத்தைத் தெரிவித்தாரா? இல்லை. "நபி பெருமானார் நலமாக இருக்கிறார்களா?" என்ற சொற்களே அவர் வாயிலிருந்து பிறந்த சொற்கள்! அதனால், அவரது

கோத்திரத்தார் அவரை விட்டுப் பிரிந்தார்கள். ஆனால், பெருமானாரைப்பற்றியே அந்த நிலையிலும் விசாரித்துக்கொண்டிருந்தார். இறுதியாக அவரை நபி பெருமானாரிடம் தூக்கிக்கொண்டு சென்றார்கள். நபி பெருமானாரைக் கண்ட பிறகே நிம்மதியடைந்தார்.

இதைப்பற்றி ஒரு ஐரோப்பிய சரித்திராசிரியர் "முஹம்மத் நபி தமது போதனைகளால் தம்மைப் பின்பற்றுவோரின் உள்ளத்தில் உண்டாக்கிய மத மயக்கமானது, இயேசு கிறிஸ்துவின் ஆரம்ப சீடர்களிடம் தேடிப்பார்த்தாலும் கிடையாது என்பதை கிறிஸ்தவர்கள் நினைவில் வைத்துக்கொண்டால் நலமாகும். இயேசுவை சிலுவைக்கு கொண்டுபோனபொழுது அவருடைய சீடர்கள் ஓடிவிட்டார்கள்! அவர்களுடைய மத மயக்கம் எங்கோ ஓடிவிட்டது! தமது குருவை மரணத்தில் சிக்கவைத்துவிட்டுப் போய்விட்டார்கள்! ஆனால். இதற்கு மாறாக, முஹம்மதைப் பின்பற்றுவோர், தமது நபிக்குத் துன்பம் வந்தபொழுது அவரைச் சூழ்ந்து நின்றார்கள். அவரைப் பாதுகாப்பவர்கள் மீதும் அவர் வெற்றியடையும்படி செய்தார்கள்" எனக் கூறுகின்றார்.

மனிதன் சொத்துக்களையும் இழப்பான். சோதனைகளையும் சகிப்பான். பொறுமையாக இருப்பான். ஆனால், தாய், தந்தை, சகோதரி, சகோதரன், உறவுமுறையோர் முதலியோரை, மனைவி, மக்களை, குடும்பத்தாரை, ஆப்த நண்பர்களைவிட்டுப் பிரிய சம்மதிக்கமாட்டான். மனிதனுடைய துன்ப நிலையிலும், வறுமையிலும், பிணியிலும் இவர்களெல்லாம் அனுதாபப்படுவார்கள். பங்குபெறுவார்கள். ஆறுதல் வார்த்தைகள் சொல்வார்கள் ஊக்கமளிப்பார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் ஒத்துழைப்பார்கள். எல்லா நிலைமையிலும் நமது வாழ்க்கையில் அவர்களைப் புறக்கணிக்க முடியாது. ஆனால் இறைவனுடன் பற்றுள்ளோர், இந்தப் பாசங்களையும் அறுக்கத் தயாராக வேண்டும். பெருமானாரின் தோழர்களெல்லாம் இஸ்லாத்தில் சேர்ந்தவுடன் இத்தகைய பந்தங்களையும்

நேசங்களையும், விட்டுவிட்டார்கள். அதனால், அவர்களுடைய இறைநம்பிக்கையின் உறுதி அணுவளவேனும் குறையவில்லை.

ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ் என்னும் நாயகத்தோழர் முஸ்லிமானார். "நீ இஸ்லாத்தை விட்டாலன்றி நான் உன்னுடன் பேசமாட்டேன்! சாப்பிடமாட்டேன்! தண்ணீர் குடிக்க மாட்டேன்!" என அவரது அன்னையார் சபதம் செய்தார். அதன்படி நடக்தும் காட்டினார். ஒருநாள் – இரண்டுநாள் – மூன்றுநாள் கழிந்தன. மூன்றும் நாள் அந்த அம்மையார் மயக்க முற்றுவிட்டார். ஆனால் ஸஅத் பின் அபீ வக்காஸ் தமது நம்பிக்கையில் உறுதியுடன் இருந்தார். இதைப்போன்றே, காலித் பின் ஸயீத் என்பவர் முஸ்லிமானவுடன் அவரது தகப்பனார் அவர் மீது கோபங்கொண்டு அவரை அடித்தார். உணவு கொடாமல் நிறுத்தினார். தமது புத்திரர்களும், புத்திரிகளும் அவருடன் பேசக் கூடாதென்று கட்டளையிட்டார். ஆனால், காலித் பின் ஸயீத் இஸ்லாத்தில் உறுதியாக நின்றார். பிறகு, முஸ்லிம்களுடன் அபிஸீனியாவுக்கு நாடு கடந்து சென்றார். இதைக்கேட்டு அவரது தகப்பனாருக்கு மனவருத்தம் உண்டாயிற்று. அவர் உடனே மக்காவிலிருந்து தாயிப் (Tayif) நகருக்குச் சென்று அங்கு குடியேறிவிட்டார்.

தாய் தகப்பன் என்பதையும் இஸ்லாத்திற்காக நாயகத் தோழர்கள் மறந்துவிட்டார்கள். பத்ர் போரில் மக்காவாசிகளின் சேனையில் உத்பா என்னும் ஒருதலைவர் இருந்தார். அவரை எதிர்த்து அவரது புத்திரரான அபூ ஹுதைபா (Aboo Hudaifa) என்னும் முஸ்லிம் சென்றார். எதிரிச் சேனையிலிருந்து அப்துர் ரஹ்மான் என்பவர் புறப்பட்டபொழுது, முஸ்லிம் சேனையிலிருந்து அவரது தந்தை ஹஸ்ரத் அபூ பக்ர் சென்று அவரை எதிர்த்தார். இந்தப் போர் முடிந்து, போர்க்கைதிகள் முஸ்லிம்களிடம் இருந்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் உமர், நபி பெருமானாரிடம் வந்து, "அவருடைய சகோதரர் அலீ

என்பவரைக் கொன்றுவிடும்படி அலீக்குக் கட்டளையிடுங்கள். என் பந்துக்களில் ஒருவரைக் கொன்றுவிடும்படி எனக்குக் கட்டளையிடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு, பெருமானரின் போதனையைப் பின்பற்றி முஸ்லிம் கணவர்கள் தங்கள் முஸ்லிம் மல்லாதமனைவிகளையும், முஸ்லிம் மனைவிகள் தங்கள் முஸ்லிமல்லாத கணவர்களையும் நீக்கிவிட்டார்கள்.

பெருமானரின் தோழர்கள் செய்த அர்ப்பணங்களில் மக்காவை விட்டு ஹிஜ்ரத்செய்து மதீனவுக்கு வந்தது மிகவும் துக்ககரமான வரலாருகும். துன்பத்தைச் சகிக்கும் இயற்கையுள்ளோரும் அப் பொழுது சகிக்கமுடியாத துன்பப்பட்டார்கள். மக்காவிலிருந்து வந்தோருக்கு மதீனநகரின் வெப்பதட்ப நிலை உடல்நலத்திற்குப் பாதகமாக இருந்தது. காற்றும் தண்ணீரும் அவர்களுக்கு கேடு செய்தன. காய்ச்சல் வந்து எல்லோரும் கஷ்டப்பட்டார்கள்.

மக்காவிலிருந்து அவர்களை மதீனவுக்குச் செல்ல விடாமல் எதிர்கள் எத்தனையோ முறைகளைக் கையாண்டு தடுத்தார்கள். அபூ ஜந்தல் என்பவரைத் தடுத்து, அவர்காலில் விலங்கிட்டார் கள். அவர் அந்த விலங்குடன், ஹுதைபிய்யாவில் பெருமான ரிடம் வந்தார். ஆனல், நபி பெருமானர் அவரை மக்காவுக்கே அனுப்பிவிட்டார்கள். அப்பொழுது அவர் முஸ்லிம்களை நோக்கி, "முஸ்லிம்களே! நீங்கள் என்னை மறுபடியும் இறைவனை வணங் காதோரிடம் அனுப்பச் சம்மதிக்கிறீர்களா? நான் முஸ்லிமாகி இங்கு வந்திருக்கிறேனே! என்ன? நீங்கள் என் துன்பங்களைப் பார்க்கவில்லையா?" என மனம் உருகும்படி கூறினர்.

ஹஸ்ரத் ஹுஹைப் மக்காவிலிருந்து மதீனவுக்குப் புறப்படத் தயாரானர். ஆனல், காபிர்கள் அவரை "நீர் மக்காவுக்கு ஏழையாக வந்தீர். ஆனல், இங்கு வந்த பிறகு பணக்காரரானீர். இந்தப் பொருளை இங்கிருந்து எங்கு கொண்டு போகிறீர்? இதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்" என்ருர்கள். இதைக் கேட்டார்·

"அப்படியானால் இந்தப் பணத்தையெல்லாம் நான் உங்களுக்குக் கொடுத்துவிட்டால் என்னைப் போகவிடுவீர்களா?" எனக் கேட்டார். அதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். உடனே, தமது சொத்துக்களையெல்லாம் அவர் அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்! அபூஹுரைரா என்னும் தோழர் கால்நடையாக வெகு கஷ்டப் பட்டு மதீனா வந்து, "அந்த இரவு வெகு நீண்டதும், துன்பமுள்ளதுமாக இருந்தது! ஆனால், இறைவனை நிராகரிப்போருடைய வீட்டிலிருந்து விடுதலை அளித்ததால், அது மனத் திருப்தியைக் கொடுத்தது!" என்றார்.

ஸஹாபாக்கள் தங்கள் சொத்துக்களையும் உயிர்களையும் காப்பாற்றுவதற்காக ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வரவில்லை. ஆனால், நபிபெருமானுடைய தோழமையானது அவர்களுடைய ஒவ்வொரு துன்பத்தையும் போக்கிவிடும் என்னும் நம்பிக்கையில் அவ்வாறு வந்தார்கள்.

பெருமானுடைய உலக வாழ்க்கைக்குப் பிறகும் ஸஹாபாக்கள் தங்களுக்குப் பிரியமில்லாத நாட்டையும் ஊரையும் துறந்து மதீனாவுக்கு வந்து வசிப்பதை விரும்பினார்கள். ஹஸ்ரத் உஸ்மானுடைய வீட்டை கலகக்காரர்கள் முற்றுகையிட்டபொழுது, ஸிரியா நாட்டுக்குச் சென்றுவிடும்படி அவருக்குச் சொல்லப் பட்டது. ஆனால், அந்த மகான், "நான் நபி பெருமானுடைய நகரத்தைவிட்டுச் செல்லமாட்டேன்" என்றார். ஹஜ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ், மக்காவில் நோயால் கஷ்டப்பட்டார். அப்பொழுது, "நான் இப்பொழுது மதீனாவில் இருந்தால் நலம்' என்றார்.

முஸ்அப் பின் உமைர் என்பவர் பெருமானாரவர்களுடைய உறவு முறையிலுள்ளவர். ஸபா மலையின் அருகிலே அர்கம் என்பவருடைய இல்லத்திலே பெருமானார் இரகசியமாக இஸ்லாமிய பிரசாரம் செய்துகொண்டிருந்த நாட்களில், முஸ்அப் ஒரு சமயம் அந்த வீட்டிற்கு வந்தார்! அப்பொழுது குர் ஆன் ஓதப்பட்டது! அதன் உண்மைகள் அவரது உள்ளத்தை மாற்றிவிட்டது! உடனே முஸ்லிமாகிவிட்டார்! ஆனால், இதை சிலகாலம் மறைத்து

வைத்திருந்தார். ஒரு நாள் இவர் தொழுதுகொண்டிருந்ததைக் கண்டு ஒருவர் இவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துவிட்டார். இச்செய்தி அவருடைய தாயாருக்குத் தெரிந்தது. உடனே மகனைப் பிடித்து விலங்கிட்டுக் கைதியாக்கி வீட்டில் அடைத்து விட்டார். நயமாகவும் பயமாகவும் பேசி இஸ்லாத்தை விட்டு விடும்படி மகனைக் கேட்டார். ஆனால், முஸ்அப் மாறவேயில்லை. மக்காவாசிகளின் துன்பங்களைத் தாங்கமுடியாமல், பெருமானாரவர்கள் சில முஸ்லிம்களை அபிஸீனியா நாட்டிற்கு அனுப்பினார்கள். அவர்களுடன் முஸ்அபும் சென்று வசித்தார். அப்பால் மதீனாவுக்குச் சென்று இஸ்லாமியப் பிரச்சாரஞ்செய்து மக்காவுக்குத் திரும்பினர். மறுபடியும் தாயார் அவரைக் கைதுசெய்ய முயன்றார். தமது தாயாரை இஸ்லாத்தில் சேரும்படி முஸ்அப் முயன்றார். ஆனால், தாயார் உடன்படாமையால் இறுதியாக வீட்டைவிட்டு வெளியேவந்துவிட்டார் இவர் இஸ்லாமியப் பணியாற்றி, பத்ர் போரில் கொடி பிடிப்போராயிருந்து, உஹத போரில் உயிர் துறந்தார். இவரது உடலை மறைத்து அடக்கம் செய்யவும் துணி போதாமலிருந்தது. தலைப்பக்கம் துணியை இழுத்தால், கால்பக்கம் துணி இராது. கால் பக்கம் இழுத்தால், தலை தெரியும். எனவே, கால் பக்கத்தை புல்லினால் மறைதது அடக்கஞ் செய்யப்பட்டார்.

முஸ்அப் என்பவர் முஸ்லிமானபொழுது எமன் நாட்டைச் சேர்ந்த அம்மார் பின் யாஸிர் என்பவர் முஸ்லிமானார். அவர் ஓர் அடிமை. அவருக்கு உதவி செய்வார் ஒருவருமில்லை. குரைஷிகள் அவரை முழு வன்மையுடன் எதிர்த்தார்கள். நடுப்பகலில் அம்மாரை நெருப்பின் மீது கிடத்துவார்கள். நீரில் மூச்சுத் திணறும்படி மூழ்க வைப்பார்கள். ஒரேதெய்வ வணக்கத்தை விட்டுவிடும்படி கட்டளையிடுவார்கள். ஆனால், அவர் மனம் மாறவேயில்லை. ஒரு சமயம் அவரை நெருப்பின்மீது கிடத்தப் பட்டிருந்தபொழுது, நபி பெருமானாரவர்கள் அவ்வழியாகச் சென்றார்கள். அவரைக்கண்டு, அவர் கையில் தமது கையை வைத்து! "நெருப்பே! நீ இப்ராஹீம் நபியிடம் நடந்துகொண்ட

தைப்போல், நீ குளிர்ந்து அம்மாருக்கு சாந்தியை கொடு!" என்றார்கள். இவர் முதுகில் இந்த நெருப்புத் தழும்புகளின் அடையாளங்கள் வெகுகாலம் வரை இருந்தன. ஏழையாகவும் வெளி ஊராகவுமிருந்த இவரை மக்கா வாசிகள் இம்சிப்பார்கள். நெருப்பில் தள்ளுவார்கள். சுடு மணலில் படுக்க வைப்பார்கள். பலமணி நேரம் நீரில் அமிழ்த்துவார்கள் இஸ்லாத்தை விட்டு விடும்படி வற்புறுத்துவார்கள். ஸுமையா என்னும் அவரது தாயாரை, இரண்டு கால்களையும் இருபுறமும் இரண்டு ஒட்டகங்களுடன் சேர்த்துக்கட்டி, அபூ ஜஹால் ஈட்டியால் குத்திக் கொன்றார்! அவரது தகப்பனார் யாஸிர், அவரது சகோதரர் அப்துல்லாஹ் இருவரும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப் பட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ரையும் அந்த மக்காவாசிகள் விடவில்லை. பெருமானாருக்கு அவர் உதவி செய்தாராகையால், ஒரு சமயம் ஒருவன் அவரது தாடியைப் பிடித்து இழுத்தான்.

ஹஸ்ரத் உஸ்மான் முஸ்லிமானார் என்று கேள்விப்பட்ட அவரது சிறிய தகப்பனார் ஹகம் என்பவர் சீற்றத்துடன் எழுந்தார். அவரைத் தலைகீழாக தொங்கவிட்டார். தரையில் நெருப்பைக் கொளுத்தினார். புகையால் மூச்சுவிட முடியவில்லை. "இஸ்லாத்தை விட்டுவிடு" என்று அவரிடம் அடிக்கடி சொல்லப்பட்டது. "முடியாது! முடியாது!" என்ற ஒரே மறுமொழிதான் ஹஸ்ரத் உஸ்மானிட மிருந்து வந்தது.

தமது தங்கை பாத்திமா முஸ்லிமாகிவிட்டதாக உமர் பின் கத்தாப் அறிந்தார். உடனே சென்று உள்ளங் களிக்க நன்றாய் அடித்தார். இரத்தம் வடிந்தது. காயங்கள் உண்டாயின. அப பொழுது அந்த மாது, "அண்ணா! இந்த உடல், இந்தத் தசை என்னுடையது. அதை என்ன வேண்டுமானாலும் செய்துகொள் ளுங்கள். ஆனால்...ஆனால். என் உள்ளத்தை... முஹம்மதுக்குக் கொடுத்துவிட்டேன்" என்றார்.

கப்பாப் (Khabbab) பின் அரத் என்பவரும் அவர்களுடைய இம்சைக்கு இலக்கானார். அவரை நெருப்பில் போடுவார்கள்.

அவர் வயிற்றின்மீது ஒரு கல்லை வைத்து ஒரு மனிதன் ஏறிநின்று அவர் அசையாமல் பார்த்துக்கொள்வான். அவரது முதுகுத் தோல் எரியும். அப்பொழுதும் அவர் ஆண்டவனுக்காகப் பொறுமையுடன் இருந்தார். அந்தக் கஷ்டத்தால் தோல் உரிந்து முதுகு வெள்ளை நிறமாக மாறிவிட்டது.

நபி பெருமானாரை மக்காவாசிகள் ஏமாற்ற முயன்றார்கள். ஆசை வார்த்தை காட்டினார்கள். பெரிய தகப்பனார் அபூ தாலிபிடம் முறையிட்டார்கள் தூதுக்கோஷ்டிகளை அனுப்பினார்கள். அவையனைத்தும் பயன்படவில்லை. அதற்கு மாறாக, குரைஷ் குடும்பத்தின் சிறந்த வீரர்களான ஹம்ஜா, உமர் என்ற இருவர் முஸ்லிமாகிவிட்டார்கள். இஸ்லாம் உயர்வதைக்கண்டு பொறாமைகொண்டு அதை அழிக்க குரைஷ் தலைவர்கள் பைத் தியம் பிடித்தோரைப் போலப் புறப்பட்டார்கள். ஒருவன் பெருமானார்மீது மண்ணை அள்ளி வீசுவான்! ஒருவன் அசுத்தமான பொருளைப் பெருமானாரின் வாயில் போடுவான். ஒருவன் பெருமானாரின் பாத்திரங்களின் மீது கெட்ட வஸ்துக்களைப் போடு வான்! உமய்யா பின் கலப் (Khalaf) என்பவரே அடிமை பிலாலின் எஜமான். அவர் பெருமானார் முகத்தில் அசுத்தமான பொருளை எறிவார். ஒரு நாள் பெருமானார் தொழுதுகொண் டிருக்கும்பொழுது, உக்பா பின் அபீ முஈத் என்பவர் பெருமானாரின் கழுத்தின்மீது ஏறி, உட்கார்ந்துகொண்டார்! அந்த பளுவால் பெருமானாரின் கண்விழிகள் பிதுங்கின! இந்தக் கல்நெஞ்சர்கள் சிலசமயம் கழுத்தை நெறிப்பார்கள். மூச்சுத் திணறிப் பெருமா னாருக்குக் கஷ்டமுண்டாகும். ஒரு நாள் பெருமானார் நடந்து செல்லும்பொழுது இந்தப் பகைவர்கள் சூழ்ந்துகொண்டு, பெருமானாரின் மேற்போர்வையால் அன்னார் கழுத்தைச் சுற்றி முறுக்கினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் அபூ பக்ர் ஓடிவந்து, "இறைவன் ஒருவன் என்று சொல்லும் ஒருவரை நீங்கள் கொல்லத் தயாரானீர்களா?" என்று தடுத்தார்.

உயர் குடும்பத்தார் இந்த பகைவரின் இன்னல்களிலிருந்து ஒருவாறு தப்பினார்கள். ஆனால், உதவியற்ற ஏழைகளும், குறிப்பாக அடிமைகளும் வெகு இலேசாகத் தாக்கப்பட்டார்கள்.

" எத்தனையோ நபிமார்களும் அவர்களுடன் ஆண்டவனுடைய அநேக நல்லடியார்களும் சேர்ந்து (அல்லாஹ்வின் பாதையில்) யுத்தம் புரிந்திருக்கின்றனர்கள். அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்ததால்) தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தின் காரணமாக, அவர்கள் தங்கள் தைரியத்தை இழந்துவிடவில்லை. பலவீனமாகிவிடவுமில்லை. (எதிரிகளுக்கு) ஐக்கியப்பட்டு விடவுமில்லை. (இவ்வாறு கஷ்டங்களைச்) சகித்துக்கொள்வோரைத்தான் அல்லாஹ் நேசிக்கிறன்" (குர்ஆன்–இம்ரான் சந்ததிகள்-3 : 146)

மக்காவிலிருந்த குரைஷ் கோத்திரத்தார் ஏன் இவ்வாறு முஸ்லிம்களைத் துன்புறுத்தினர்கள்? இஸ்லாம் மார்க்கம் அவர்களது கண்களில் ஒரு சமுதாயப் புரட்சியாகவே தோன்றியது. மக்காவிலுள்ள கஃபாவில் விக்கிரகங்கள் நிறைந்திருந்தன. அவற்றை வணங்க அரபியர்கள் வருவார்கள். குரைஷ் கோத்திரத்தார் கஃபாவின் தர்மகர்த்தாக்களாக இருந்தார்கள். அந்நிலைமையில் அவர்களுக்கு அதிக வருமானம் வரும். இஸ்லாம் மார்க்கம் இந்த இலாபத்திற்கு இன்னலாக இருந்தது. மேலும், இஸ்லாம் மார்க்கம், "மனிதராகப் பிறந்தோரெல்லாம் சகோதரர்களே" என்று போதித்தது. உயர்குலத்தார் எனக் கருதி வந்த குரைஷ் கோத்திரத்தாருக்கு இது ஓர் இடியோசை போலத்தோன்றியது.

திருநபியவர்கள் அரபிய மக்களை, "அஞ்ஞானத்திலிருந்து இஸ்லாமிய ஒளியின் பக்கம் வாருங்கள்! ஆத்ம வாழ்க்கையை அடையுங்கள்! மூடநம்பிக்கைகளைக் களையுங்கள்! பெண் குழந்தைகளைக் கொலை செய்யாதீர்! பெண்களை அவமதிக்காதீர்! ஏழைகளையும் அடிமைகளையும் உங்களைப் போலவே கருதுங்கள் மறு உலக வாழ்க்கை உண்டென்று நம்பி தீமையை அகற்றி, நன்மை செய்யுங்கள! இறைவனுடைய சட்டங்களுக்குக் கீழ்ப்படியுங்கள்! மண்ணாலும், மரத்தாலும், கல்லாலும், செம்பாலும் அமைத்த உருவங்களை வணங்காதீர். அன்புடையோனும், அருள் நிறைந்தோனுமான அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். ஒழுக்க உலகின் பாலைவனமாக மாறிவிட்ட அரபிய நாட்டை ஆத்மீகப் பூங்காவாக மாற்றி அமையுங்கள்" என்று அறைகூவி அழைத்தார்கள்.

அந்த அழைப்பு இறுதியில் பயனளித்தது. திரு நபியவர்களது வாழ்க்கையிலேயே அவர்களது தூது முற்றுப்பெற்றது. அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் வெற்றி கிடைத்தது. ஈஸா நபியவர்களும் மூஸா நபியவர்களும், ஜொராஸ்தரும், புத்தரும், பிளேட்டோ (அப்லாதூன்)வும், ஆண்டவனுடைய ராஜ்யத்தைப் போதித்தார்கள். மக்களை உய்விக்கும் வகை தேடினார்கள். எனினும், அவர்கள் அனைவரும் தங்கள் குறிக்கோளை அடையாமல் இவ்வுலகை விட்டுச்சென்றார்கள். மத ஸ்தாபகர்கள் மறைந்தபின் சில மதங்கள் சில மன்னர்களின் உதவியால் பரவின. புத்த மதம். அசோக சக்ரவர்த்தியால் பிரச்சாரஞ் செய்யப்பட்டது. ஜொரதஸ்தர் மதம், டேரியஸ் (தாரா) மன்னரால் பரவியது. கிறிஸ்தவ மதம், கான்ஸ்தந்தையின் சக்ரவர்த்தியால் பரவியது ஆனால், தங்கள் வாழ்நாளிலே தங்கள் குறிக்கோளை அடைந்த பெருமை—எத்தனையோ நபிமார்கள் போதித்த இஸ்லாம் மார்க்கத்தைப்—பூரணமாகக் கண்ட தனிச் சிறப்பு-எம்பிரான் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கே உரியது.

## 5. பாங்கு (அதான்) (Call for Prayer)

பல்லாண்டுகளாகத் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களை நபிபெருமானார், மதீனா நகருக்கு இடம் பெயர்ந்து போகும்படி கட்டளையிட்டபொழுது, அவர்கள் சரித்திரப்புகழ் பெற்ற ஹிஜ்ரத் செய்தார்கள். பெரிய அர்ப்பணங்கள் செய்தார்கள். மனிதன் ஒரு குறிக்கோளுக்காக சில நாட்களுக்காவது துன்பங்களைச் சகித்துக்கொள்ள முடியும். சிலகாலம் தன் பொருளையும் இழக்க முன்வருவான். இல்லை. ஒருமுறை தன் உயிரையும் கொடுத்துவிடுவான். ஆனால், தன்னுடைய மனைவி மக்களையும், உற்றார், பெற்றார், நண்பர்களையும், சொத்தையும், சுகத்தையும் விட்டுவிட்டு நிரந்தரமாக வேறிடத்திற்கு இடம் பெயர்ந்து, தேசப் பிரஷ்டத்தின் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டிருப்பது மிக மிகக் கடினமான சோதனையாகும்.

பெருமானுடைய கட்டளைக்குத் தலைசாய்த்து மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்த முஸ்லிம்களெல்லாம் நடைமுறையில்

செய்த அரிய பெரிய அர்ப்பணம் சரித்திரப் பெருமை பெற்றது, அர்ப்பணங்களிளெல்லாம் பெரிய அர்ப்பணம், இறைவனுக் காகவும், இறைவனுடைய தூதருக்காகவும்,தம் தாய்நாட்டை, பிறப்பிடத்தை, தம் மனைவி மக்களை, தம்பெற்றோரை, சகோதர சகோதரிகளை, உறவு முறையாரை, அண்டை அயலாரை, நண் பர்களை, வீட்டை, சொத்துக்களை எதிரிகளின் கொடுமைக்கு ஆளாகும் நிலைமையில் விட்டுவிட்டு, அகதிகளாக வசிப்பது என்ருல், அது சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடிய அர்ப் பணமல்ல. வேறு மதத் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் இத்தகைய அரிய தியாகிகளின் புனிதமான குழுவைக் காண்பதரிது.

மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து அகதிகளாக வெளியேறிய பொழுது அவர்கள் கையில் காசில்லை. உடுத்த நல்ல துணியில்லை. உண்ண உணவில்லை. சுருங்கக் கூறினுல், உலகச் செல்வம் என்பது அவர்களிடம் அனுவளவும் கிடையாது. ஆனுல், இந்த முஹாஜிரீன்-அகதிகளுடைய உள்ளங்கள் ஈமான் என்னும் இறை நம்பிக்கையிலும் இறைவனுடையவும், இறைவனுடைய தூதருடை யவும், நேசத்திலும் இஸ்லாமிய உணர்ச்சிப் பணி என்னும் பெருஞ் செல்வத்திலும் நிறைந்திருந்தன. இந்தச் செல்வங்களின் நிறைவால் அந்தப் புனித மக்கள் உலக சம்பத்துக்களை ஒரு பொருளாக மதிக்கவு மில்லை. அவற்றை விரும்பவு மில்லை. அவற்றின் தேவையை உணரவு மில்லை.

திருப்பியவர்கள் மக்காவிலிருந்து மதீனு சென்ருர்கள். முஸ்லிம் களும் அங்கு சென்ருர்கள். ஹஸ்ரத் பிலாலும் உடன் சென்ருர். மதீனுவில் பெருமானர் ஒரு பளளிவாயில் கட்டினுர்கள். அங்கு முஸ்லிம்கள் அனைவரும் கூடி ஓரிடத்தில் இறைவணக்கஞ் செய் தார்கள். அந்தப் பள்ளிவாயிலுக்கு "மஸ்ஜிதே நபவீ" நபியின் பள்ளிவாயில் எனப் பெயர்.

தொழுகைக்கு மக்களை அழைக்கும் பணி ஹஸ்ரத் பிலாலுக்குக் கொடுக்கப்பட்டது. பெருமானுரவர்கள் இந்தப் பொறுப்பை ஹஸ்ரத் பிலாலுக்குக் கொடுத்தார்கள். அதான் என்னும்

25432
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL

தொழுகை அழைப்பை உரத்த குரலில் கூப்பிடுவோருக்கு முஅத்தின் என்று பெயர். எனவே இஸ்லாத்தின் முதல் முஅத்தின் ஹஸ்ரத் பிலால் ஆவார்.

தினந்தோறும் ஒவ்வொரு பள்ளிவாசலிலும் ஐந்து வேளைப் பிரார்த்தனைக்கு முன் அழைக்கப்படும் பாங்கு :—

"அல்லாஹுஅக்பர்"—(அல்லாஹ் மிகப் பெரியவன்) நான்கு தடவை.

"அஷ்ஹது அன் லா இலாஹ் இல்லல்லாஹ்" —(வணக்கத் திற்குரியவர் அல்லாவைத் தவிர எவருமில்லை என்று நான் சான்று பகர்கின்றேன்) இரண்டு தடவை.

"அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸுலுல்லாஹ்" — (முஹம்மத், அல்லாஹ்வின் தூதர் என்று நான் சான்று பகர்கின் றேன்) இரண்டு தடவை.

"ஹய்ய அலஸ் ஸலாத்"—(தொழுகைக்கு வாருங்கள் இரண்டு தடவை.

"ஹய்ய அலல் ஃபலாஹ்"— (ஈடேற்றத்திற்கு வாருங்கள்) இரண்டு தடவை.

"அல்லாஹுஅக்பர். அல்லாஹுஅக்பர். லாயிலாஹ் இல்லல்லாஹ்".

அதிகாலையில், "அஸ்ஸலாத்து கைருமி மினன் நவ்ம்"- (தூக்கத்தைவிட தொழுகை மேலானது) இரண்டு தடவை.

இந்த பாங்கை பள்ளிவாயிலில் நின்று சப்தமிட்டுச் சொல் லும்படி ஹஸ்ரத் பிலாலுக்குத் திரு நபியவர்கள் கட்டளையிட் டார்கள். அவரும் அவ்வாறே செய்துவந்தார். அவருடைய குரல் வெகுதூரம் கேட்கும். இனிமையாக இருக்கும். உள்ளத்தை உருக்கும். ஹஸ்ரத் பிலால் பாங்கு சொல்வதைக் கேட்டவுடன், ஒரே தெய்வத்தை வணங்குவோருக்கு ஒரு நவீன உணர்ச்சி

உண்டாகிவிடும். ஆண்கள் தங்கள் வேலைகளை நிறுத்திவிடுவார்கள்! சிறுவர் தங்கள் விளையாட்டுகளை நிறுத்துவார்கள்! ஆண்களும், பெண்களும், சிறுவரும், சிறுமியரும் ஹஸ்ரத் பிலாலைச் சூழ்ந்து கொள்வார்கள்! மக்கள் வந்தவுடன், ஹஸ்ரத் பிலால், பக்கத்திலிருந்த பெருமானாரின் இல்லத்திற்குச் சென்று, "ஹய்ய அலஸ்ஸலாத்! ஹய்ய அலல் பலாஹ்! அஸ்ஸலாத் யா ரஸுலல்லாஹ்!" அதாவது, தொழுகைக்கு எல்லாம் தயாராக இருக்கிறது என்று நபிபெருமானாருக்கு அறிவிப்பார். பெருமானார் வந்தவுடன் மக்கள் வரிசை வரிசையாக மஸ்ஜித் நபவீ பள்ளி வாயிலில் நின்று பெருமானாரின் தலைமையில் இறைவணக்கம் செய்வார்கள்.

ஹஸ்ரத் பிலாலுடைய இந்த அழைப்பைக் கேட்டவுடன் மக்கள் திரண்டு மதீனாவில் மஸ்ஜிதே நபவீ என்று பள்ளிவாயிலில் வந்து கூடி விடுவார்கள். பாங்குக் குரல் கேட்டவுடன் முஸ்லிம்கள் தங்கள் வேலைகளையும் பேச்சையும் நிறுத்தி, மனதை ஆண்டவனிடம் செலுத்தி நிம்மதியுடன் இறைவனது புகழைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

பாங்கு சொல்லும் வழக்கம் ஹிஜ்ரீ முதலாம் ஆண்டிலே ஆரம்பமாயிற்று. முஸ்லிம்களுடைய கூட்டுத் (ஜமாஅத்) தொழுகையும் ஆரம்பமாயிற்று. தொழுகைக்கு மக்களை அழைக்கும் முறையைப்பற்றி கருத்து வேற்றுமை இருந்தது. சிலர், சங்கு 'ஊதலாம்' என்றார்கள். சிலர், நெருப்பை வளர்த்து, அழைக்கலாம் என்றார்கள். சிலர் கிறிஸ்தவர்களைப் போல மணி அடித்து அழைக்கலாம் என்றார்கள். சிலர், வேறு முறைகளைச் சமர்ப்பித்தார்கள். இறுதியாக, இப்பொழுது இஸ்லாமிய உலகில் அனுசரிக்கும் முறையைப் பெருமானாரவர்கள் விரும்பி அதைச் சப்தமிட்டுச் சொல்லும்படி ஹஸ்ரத் பிலாலுக்குக் கட்டளையிட்டார்கள்.

பாங்கு சப்தமானது மக்கள் மனதை மாற்றக்கூடியது. இகலோக இச்சையில் உள்ளோரை இறைவன் பக்கம் இழுக்கக் கூடியது. இன்னிசையுள்ளது. உலக வேலைகளில் ஆழ்ந் திருப்போரை ஆண்டவன் பாதைக்கு அழைக்கும் அருமருந்து. அதிகாலையிலே, எங்கும் நிம்மதியே நிலவி இருக்கையில் இந்த அழைப்பு மனதில் மந்திர சக்தியை உண்டாக்குகிறது. இஸ்லாமிய வணக்க அழைப்பு ஒரு தனிச் சிறப்புடையது. ஏனென்றால், அது ஒரு சிறிய வணக்கமாக அமைந்துள்ளது. அதில் மனித னுக்கு அவசியமான பெருங் கொள்கைகள் பொதிந்துகிடக்கின்றன. இந்த அழைப்பை ஏற்று இறைவனுக்குத் தலைசாய்ப்போர் அனை வரும் பாக்கியவான்களே.

கொல்லன் கொல்லுலையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பை அடிக்கிறான். தையற்காரன் துணி தைக்கிறான். மாணவன் வாசிக்கிறான். பிரயாணி வழி நடக்கிறான். எல்லோரும் பாங்குக் குரல் கேட்டவுடன், தமது வேலைகளை நிறுத்தி விடுகிறார்கள்! எங்கும் நிசப்தம்! எல்லோரும் இறைவன் பெயரைக் கேட்டு ஆனந்திக்கிறார்கள்! அமைதி நிலவுகின்றது! எட்டுமட்டும் பாங்குச் சப்தம் தடையொன்றுமின்றிச் செல்லுகிறது! அச்சமயம், எவராயினும் "அஸ்ஸலாமு அலைக்கும்!" என்றால், அதற்கு பதில் ஸலாமும் சொல்லப்படமாட்டாது. திருக்குர்ஆன் ஓதுவோரும் அதை நிறுத்தி விடுவர். ஆண்டவனுடைய திருநாமம் உன்மத்தரின் உள்ளத்தையும் துளைத்துக்கொண்டு ஊடுருவிப் பாயும். எல்லோரும் ஆண்டவனுடைய வீட்டை நோக்கி விரைந்து செல்வார்கள்.

பெருமானாரவர்கள் மதீனாவில் இருக்கும்பொழுதும், வெளியே பயணம் செல்லும்பொழுதும், ஹஸ்ரத் பிலால் பெருமானாருடன் இருந்து தொழுகைக்கு முன்னர் பாங்கு சொல்வது வழக்கம். ஒரு சமயம் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்பொழுது இரவாகி

விட்டது. சில ஸஹாபாக்கள் பெருமானாரிடம் வந்து, ''இறைவனுடைய தூதரே! இங்கு தங்கிவிட்டால் நல்லது'' என்றார்கள். அதற்குப் பெருமானார், ''தூக்கமானது நீங்கள் உங்கள் தொழுகையை மறந்துவிடும்படி செய்துவிடுமென்று நான் அஞ்சுகிறேன்'' என்றனர். ஹஸ்ரத் பிலால் அப்பொழுது முன் வந்தார், தாம் இரவில் விழித்திருக்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. தாம் எல்லோரையும் தூக்கத்திலிருந்து தொழுக்கைக்குமுன் எழுப்பி விடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எனவே, அங்கு தங்கும்படி பெருமானார் கட்டளையிடவே, எல்லோரும் இறங்கி அன்றிரவு நன்றாகத் தூங்கினார்கள். பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஹஸ்ரத் பிலால் இரவு முழுவதும் தூங்காமல் வெகு ஜாக்கிரதையாக விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தார். ஆனால், அந்த நிலைமையிலும் அவருக்கு எப்படியோ தூக்கம் வந்துவிட்டது. தூங்கினார், தூங்கினார், சூரியன் உதிக்கும் வரை கண்விழிக்கவில்லை...பெருமானார் தூக்கத்திலிருந்து எழுந்து, பிலாலை அழைத்தார்கள். ''பிலால் நீர் பொறுப்பு ஏற்றீரே! அது என்ன ஆயிற்று?'' என்று கேட்க, அதற்கு பிலால், ''இறைவனுடைய தூதரே! இன்று எனக்கு ஏற்பட்ட தூக்கமும் மறதியும் என்றும் ஏற்படவில்லை!'' என்றார். உடனே பெருமானார், ''ஆம், இறைவன் விரும்புகிறபொழுது உங்கள் ஆத்மாக்கள் மீது ஆதிக்கம் பெறுகிறான். அவன் விரும்பும்பொழுது அவற்றை உங்களிடம் அனுப்பிவிடுகிறான். சரி, எழுந்திரும்! பாங்கு சொல்லும்! மக்களைத் தொழுகைக்காக ஒன்றுசேரும்!'' என்றார்கள்.

இச் சந்தர்ப்பத்திலே ஒரு நிகழ்ச்சி ஞாபகத்திற்கு வருகிறது அது நமக்கொரு படிப்பினையுமாகும். ஹஸ்ரத் பிலாலை எம்பெருமானார் முஅத்தினாக நியமனம் செய்தபொழுது, நாயகத் தோழர்களிற் சிலர் அதை விரும்பவில்லை. ஏனென்றால், ஹஸ்ரத் பிலால் கொன்னல் உள்ளவர். அரபி வார்த்தைகளை நன்கு உச்சரிக்கத் தெரியாதவர். ''அஷ்ஹது'' என்பதை ''அஸ்ஹது'' என்பார். ஆனால், அந்த உச்சரிப்பிலும் கொன்னலிலும் ஆண்டவனுடைய பக்தியும் இறைதூதருடைய

காதலும் நிறைந்திருந்தன. அதில் உள்ளத் தூய்மை இருந்தது. அதில் விசுவாசம் இருந்தது. மக்கள் அவரது சொற்களைக் கவர்ச்சியுடன் கேட்டு உணர்ச்சி பெற்றார்கள். மறுமலர்ச்சி அடைந்தார்கள். அவரது பணியில் ஒரு தனி எழில் நிரம்பியிருந்தது. எனவே, தோழர்களுடைய மறுப்புரைகளைப் பெருமானாரவர்கள் கவனிக்கவில்லை.

இறைவனுக்கும் நமக்கும் ஏற்படும் தொடர்பிலே உள்ளத் தூய்மையும் உண்மை விசுவாசமுமே முக்கியமானதென்று இந்த நிகழ்ச்சியிலிருந்து அறிகின்றோம்.

## 6. பத்ர் போர்

முஸ்லிம்களெல்லாம் மதீனாவில் குடியேறியவுடன் பெருமானாரவர்கள் மூன்று முக்கியமான திட்டங்கள் அமைத்தார்கள்.

முதலாவதாக, ஒரு பள்ளிவாயில் கட்டி, அதை இஸ்லாமிய வாழ்க்கையின் மத்தியஸ்தானமாக்கி, அதன் மூலமாகத்திருக் குர்ஆனுடைய போதனைகளைப் பரப்பி இஸ்லாமியச் சட்டங்களை மக்கள் செயலாற்றும்படி செய்விக்கும் நிர்வாக அதிகாரி ஆனார்கள்.

இரண்டாவதாக, மதீனாவிலிருந்த அன்ஸார் (உதவியாளர்) களையும் மக்காவிலிருந்து மதீனா வந்த முஹாஜிர் (அகதி) களையும் ஒரே சகோதரத்துவத்தில் இணைத்தார்கள். இந்தச் சகோதரத்துவம் உண்மையான சகோதரத்துவம். இந்த இணையில்லா இஸ்லாமிய சகோதரத்துவம் இஸ்லாம் மார்க்கத்திற்குத் தனிச் சிறப்பு அளிக்கின்றது.

மூன்றாவதாக, மதீனாவிலிருந்த முஸ்லீமல்லாதாருடன் உடன் படிக்கை செய்துகொண்டார்கள். அங்கிருந்த யூதர்கள் முஸ்லிம் களுடன் சமாதானமாக வாழ ஒப்புக்கொண்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு, அவர்கள் பெருமானாருக்கு விரோதமாக மறைமுகமாகச் சதிசெய்தார்கள். மதீனாவில் இருந்த நயவஞ்சகர் களுடனும் அவர்களது தலைவர் அப்துல்லாஹ் பின் உபை என்பவ ருடனும் அவர்கள் கலந்துகொண்டார்கள். இந்த நயவஞ்சர்கள் (முனாபிகீன்) வெளிப்படையாக இஸ்லாம் மார்க்கத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். எனினும், மறைமுகமாக இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதஞ் செய்தார்கள்.

பெருமானாரவர்கள் மதீனாவுக்குச் சென்று, அங்கு அவர் களுக்குச் சக்தியும் செல்வாக்கும் அதிகரித்திருப்பதைக் கேள்விப் பட்டுப் பொதுவாக மக்காவாசிகளும், சிறப்பாக குரைஷ் கோத்திரத்தாரும் ஏமாற்றமடைந்தார்கள். திரு நபியவர்களைக் கொன்றுவிட அவர்கள் மக்காவில் முடிவு செய்திருந்தார்களல்லவா? ஆனால், இப்பொழுது அந்த நபியார் மதீனாவில் குடியரசுத் தலைவ ரானார்கள். இஸ்லாமை அழிக்க அவர்கள் முயன்றார்கள். ஆனால், அது மதீனாவில் வளர்மதியாக விளங்குகிறது. யத்ரிப் Yathrib என்னும் நகரின் பெயரே மதீனத்துந்நபி-City of the Prophet-மதீனா-நபிநகர்-என்று மாற்றப்பட்டுவிட்டது.

எனவே, இஸ்லாம் என்னும் இப்பயிரை நன்றாய் முற்று முன்னரே கிள்ளி எறிந்துவிட வேண்டுமென்று குரைஷ் கோத்திரத் தார் முடிவுசெய்தார்கள். மதீனாவில் நயவஞ்சகரின் தலைவரான அப்துல்லாஹ் பின் உபை அந்த மக்காவாசிகளுக்கு உதவி செய்வதாக முன்வந்தார். அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்து முஸ்லிம்களைத் தாக்கினால், இந்த நயவஞ்சர்கள் அவர்களுக்கு உதவி செய்வதாக உறுதி கூறினார்கள். இவ்வாறாக, மதீனா

விலிருந்த யூதர் (எஹூதி) களும் நயவஞ்சகர்களும் உதவி செய்தல் உறுதி என்று தெரிந்தவுடன், மக்காவாசிகள் தங்கள் ஆக்ரமிப்பை ஆரம்பித்தார்கள்.

மக்காவிலிருந்து குரைஷ் படைகள் ஏறத்தாழ இருநூறு மைல் நடந்து மதீனாவுக்கு வந்துசேர்ந்தன. முஸ்லிம்கள் தற்காப்பிற்காகப் போர்புரிய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அவ்வாறு செய்யாவிட்டால், அவர்கள் அனைவரும் அழிந்துபோகவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பாவத்திலிருந்து—தீமையிலிருந்து விலக, மூன்று வழிகள் இருக்கின்றன. முதலாவது, தீயோரை நன்மையின் பக்கம் திருப்புதல். இதை, உண்மையின் பிரச்சாரஞ்செய்தல் (தப்லீக்) என்கிறோம். இதில் வெற்றி கிடைக்காவிட்டால், தீமைக்கு இருப்பிடமான இடத்தை விட்டு வேறிடம் சென்றுவிடவேண்டும். இதை ஹிஜ்ரத் என்கிறோம். மூன்றாவதும் இறுதியானதும் இறை நெறியில் உயிர்விடும் ஜிஹாத் என்னும் புனிதப்போர். தீமையானது நன்கு வேரூன்றி விட்டால் அது நன்மையை அழித்து விடும் எனவே தீமையை அழிப்பது அவசியமாகும்.

இச் சந்தர்ந்தர்ப்பத்திலே தீமை செய்வோரிடம் கருணை காட்டுவது தன்னைத்தானே அழித்துவிடுவதாகும். தீமையை அழிப்பது நமது கடமை. இது இறைவனுக்காக செய்யப்படும் பணி. இது இவைணக்கமுமாமும். இதனால்தான், திருக் குர்ஆனிலே, "ஜிஹாத்" என்பதை இறைவணக்கம், தொழுகை, பக்திமார்க்கம் என்று கூறப்பட்டுள்ளது. இறைநேசர் எல்லாரும் இத்தகைய தீமையை அழித்து, உலகில் நன்மையை நிலைநாட்டல் தங்களது கடமை எனக் கொள்ளல் வேண்டும்.

மதீனா நகரம் மக்காவுக்கு வடக்கில் இருநூறுமைல் தூரத்தில் இருக்கிறது. குரைஷ் கோத்திரத்தார் மக்காவிலிருந்து இஸ்லாம் மார்க்கத்தை அழிக்க மதீனாவுக்கு வந்தார்கள். எதிர்ப்பு மக்காவாசிகளால் ஏற்பட்டது.

அவர்களே மக்காவிலிருந்த மதீனாவுக்கு வந்தார்கள். முஸ்லிம்கள் மதீனாவிலிருந்து மக்காவுக்குச் சென்று ஆக்ரமிப்பு யுத்தம் தொடர வில்லை. எதிர்க்கப்பட்டபொழுது தற்காப்புப் போரே செய்தார்கள்.

பத்ர்—Badr—என்பது மக்காவாசிகளை முஸ்லிம்கள் சந்தித்து அவர்களுடன் தற்காப்புப் போர் செய்த இடத்தின் பெயராகும். அதன் பகைவர்களிடமிருந்து இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம்களால் வாள் எடுக்கப்பட்ட—இஸ்லாமிய சரிதையில்—முதலாம் போர்க்களம் பத்ர். இருப்பதா இறப்பதா என்ற நிலைமையில் ஒரு சிறு எண்ணிக்கையுள்ள முஸ்லிம்கள் போர் செய்தமையால், இஸ்லாமிய வரலாற்றில் பத்ர் முக்கிய இடம் பெற்றுள்ளது.

ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு, மக்காவிலிருந்து ஆயிரம் வீரர்கள் பத்ர் போர்க்களத்தில் வந்தார்கள், முஸ்லிம்கள் முன்னூறு பேர். சிறு தொகையினர். ராணுவத் தளவாடங்கள் கிடையாது. ஆகாராதிகள், போர்க் கவசங்கள் முதலியன திருப்திகரமாக இல்லை. உதவி செய்வாரும் இல்லை. உலக வரலாற்றிலே பத்ர் போர் தனி இடம் பெற்றதாகும். அன்று அப்போரில் முஸ்லிம்கள் அழிந்திருந்தால் உலக சரித்திரமே வேறு விதமாக அமைந்திருக்கும்.

முஸ்லிம்களின் தலைவர் "இமாம்" எனப்படுகின்றார். முஸ்லிம்களுடைய இமாம் பள்ளிவாயிலில் தொழுகை நடத்தும் இமாம் மட்டுமல்ல. ஆனால், முஸ்லிம்களது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். பள்ளிவாயிலில் ஒரு இமாமும் பள்ளிவாயிலுக்கு வெளியில் வேறு இமாமும் ஆக இரண்டு இமாம்கள் இருக்க முடியாது.

எனவே, எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்கள் போர்க்களத்திலும் இமாமாக (தலைவராக) இருந்தார்கள். முஸ்லிம்களை வரிசை வரிசையாக

திருத்தினார்கள். அவர்களுக்கு அவசியமான கட்டளைகளை விடுத்தார்கள். திருக் குர்ஆன் ஓதினார்கள். ஜிஹாதைப் பற்றிப் போதித்தார்கள். இறுதியாக, ஆண்டவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்தார்கள்.

"ஆண்டவனே! இந்த முந்நூற்றுப் பதின்மூன்று முஸ்லிம்களே உன்னுடைய திருநாமத்தை நிலைநிறுத்தும் படையைச் சேர்ந்தவர்கள். அவர்களே உனக்காகத் தங்கள் இரத்தத்தை இறுதிச் சொட்டு வரையும் சிந்தச் சித்தமாயிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில்தான் அவர்களுக்கு உன் உதவி மிகமிகத் தேவையாக இருக்கிறது. இந்தச் சிறு தொகையினர் இன்று அழிந்துபோனால், உன்னை வணங்குவோர் இல்லாமல் போய் விடுவார்கள்" என்று பிரார்த்தித்தார்கள்.

போர் ஆரம்பித்தது. "அல்லாஹு அக்பர்!" (அல்லாஹ்வே மிக மேலானவன்) என்று முஸ்லிம்கள் இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டு போர்க்களத்தில் இறங்கினார்கள். அன்று பல முஸ்லிம்கள் உயிரையும் மதியாமல் வீரச் செயலாற்றினார்கள். குரைஷ்களில் தொண்ணூறுபேர் கைதியானார்கள். பலர் இறந்தார்கள். பலர் உயிர்தப்பி ஓடினார்கள். முஸ்லிம்களுக்குப் பூரண வெற்றி கிடைத்தது.

பத்ர் போர் முஸ்லிம்களுடைய உறுதியை இன்னும் அதிகரித்தது. அல்லாஹ்வின் உதவி முஸ்லிம்களுக்கே என்று நிச்சயமாகிவிட்டது. இறைவன் முஸ்லிம்களுடன் இருக்கிறான் என்று அரபியாவெங்கும் பகிரங்கமாயிற்று. மக்காவின் விக்கிரகங்களால் உதவிசெய்ய முடியவில்லை என்றும் தெரிந்தது. எனவே அரபியர் இஸ்லாத்தின் மீதிருந்த தப்பெண்ணத்தை மாற்றினார்கள்.

ஹஸ்ரத் பிலால் பத்ர் போரில் பங்கெடுத்துக் கொண்டார். இஸ்லாம் மார்க்கத்தின் பெரும் பகைவரும், பிலாலைச் சித்திரவதை செய்தவரும், முன்னர் அவரது எஜமானாகவுமிருந்த உமய்யா பின கல்ப் (Khalaf) என்பவர் மக்கா சேனையுடன் வந்து முஸ்லிம்களை எதிர்த்தார். இந்த உமய்யா

அந்தப் போர்க்களத்திலே ஹஸ்ரத் பிலாலுடைய வாளுக்கு இரையானார். அபூ ஜஹல், உத்பா, ரபீஆ போன்ற பல குரைஷ் தலைவர்கள் இந்தப் போரில் இறந்தார்கள்.

இந்தப் போரில் உயிர் துறந்த முஸ்லிம்கள் இஸ்லாமிய சரிதையில் உயர்விடம் பெற்றிருக்கின்றார்கள். அந்தத் தனிச் சிறப்பு ஹஸ்ரத் பிலாலுக்கும் உரியதாகும்.

## 7. உஹுத் போரில்

பத்ர் போரில் மக்காவாசிகளுக்குத் தோல்வியுண்டாயிற் றல்லவா? அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட அவமானம் அளவிட முடியாதது. அன்றுவரை அதியுன்னதப் பதவியில் இருந்த குரைஷ் கோத்திரத்தார் அரபியமக்கள் எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டார்கள். ஆனால், இந்தப் படுதோல்வியால் தாழ்ந்த நிலை அடைந்தார்கள்.

எனவே, முஸ்லிம்கள்மீது எப்படியாயினும் பழிவாங்கவேண்டு மென்று முடிவுசெய்தார்கள். மக்காவாசிகளும் அவர்களது தலைவர் அபு ஸுஃப்யானும் மறுமுறையும் போருக்குத் தயாராகி மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்தார்கள். மதீனாவின் அருகிலிருந்த உஹுத் (Uhad) மலையடியில் ஒரு நீரூற்றுக்கு அருகில் தங்கள் கூடாரங்களை அடித்தார்கள். அவர்களுடன் பெண்டிரும் கலந்து தங்கள் மக்களையும், தந்தையரையும், கணவரையும், சகோதர ரையும் ஊக்கமூட்டிப் போரில் குதிக்கும்படி தூண்டுவதற்காக வந்திருந்தார்கள். இவ்வாறு வந்தவர்கள் மூவாயிரம்பேர். அவர் களிடம் இருநூறு குதிரைகளும் முன்னூறு ஒட்டகங்களும் இருந்தன. ஏராளமான ஆகாராதிகளும் கொண்டு வந்திருந்தார்கள்.

முஸ்லிம்களின் தொகை மிகக் குறைவு. நயவஞ்சகர்களின் தலைவரான அப்துல்லாஹ் பின் உபை தமது முன்னூறு ஆட்களோடு முஸ்லிம்களுடன் வருவதாக முதலில் பாசாங்கு

செய்து, பிறகு மதீனாவுக்குத் திரும்பிப்போய் விட்டார். எனவே எழுநூறு முஸ்லிம்களே உஹுத் போரில் கலந்துகொண்டார்கள்.

பொழுது விடிந்தது! ஹஸ்ரத் பிலால் பாங்கு சொன்னார்! முஸ்லிம்களெல்லாம் வரிசையாய் நின்று தொழுதார்கள்! தொழுது முடிந்தவுடன் போர் தொடங்கியது. முஸ்லிம்களுடைய வரிசை களுக்குப் பின்புறம் உஹுத்மலை இருந்தது. மலையின் பின்புற மிருந்து எதிரிகள் மறைவாக வந்து தாக்காமல் தடுப்பதற்காக, முன்னெச்சரிக்கையுடன் நபி பெருமானாரவர்கள் ஐம்பது வில்லாளி களை நிறுத்தினார்கள். எந்த நிலைமையிலும் அவர்கள் அங்கிருந்து நகரக்கூடாது என்றும் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார்கள்.

போரில் முதலில் முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது எதிரிகள் பின்வாங்கினார்கள். எனவே, முஸ்லிம்கள் சிறைப் பொருள்களைச் சேகரிக்க ஆரம்பித்தனர். உஹுத் மலையின் பின் புறம் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த வில்லாளிகள் தங்களுக்குப் பெருமானாரவர்களால் இடப்பட்டிருந்த கண்டிப்பான கட்டளையை மறந்தார்கள். சிறைப் பொருட்களைச் சேகரிக்கப் போர்க் களத்திற்கு வந்துவிட்டார்கள். எனவே, உஹுத் பள்ளத்தாக்கு பாதுகாவலில்லாமலிருந்தது. இதை எதிரிகள் கண்டுகொண்டார் கள். அவர்களில் ஒருவரான காலித் பின் வலீத் என்பவர் உடனே, சுற்றி வந்து முஸ்லிம்களைப் பின்புறமாகத் தாக்கினார்.

உடனே, போரின் போக்கு மாறிவிட்டது! முஸ்லிம்கள் நான்கு திசைகளிலிருந்தும் திடீரென்று தாக்கப்பட்டார்கள். நபிகள் நாதர் ஆவி துறந்தார்கள் என்ற வதந்தி கிளம்பியது. இது பொய் வதந்தி. உடனே. தோழர்களெல்லாம் நபிபிரானைத் தேடி அவர்களைக் கண்டு அவர்களைச் சுற்றி இரும்புச் சுவர்போல் நின்றுகொண்டார்கள். எதிரிகளிடமிருந்து வரும் அம்புகள் பெருமானாரவர்கள்மீது பாயவிடாமல், அவற்றைத் தங்கள் உடல் களால் கேடயம் போன்று நின்று தடுத்தார்கள். அபூ தஜ்ஜானா

என்னும் தோழர், பெருமானாரின் பக்கமாக முகத்தைத் திருப்பி நின்று, எதிரிகளின் அம்புகளுக்குத் தமது முதுகைக் கேடயமாக உபயோகித்தார் இந்தத் தியாகத்தில் அன்ஸாரர்களும் முஹாஜிர்களும் பங்கெடுத்துக்கொண்டார்கள். எதிரிகள் முஸ்லிம்களைச் சூழ்ந்துகொண்டு, அவர்களை நெருங்கிக்கொண்டிருந்தார்கள். நாயகத்தோழர்கள் அன்று உண்மையான தியாகஞ்செய்தார்கள். பலர் காயமடைந்தார்கள். பலர் அங்கங்களை இழந்தார்கள். இறுதியாக, பெருமானாரவர்களை அழைத்துக்கொண்டு, மலைமீது பாதுகாவலான இடத்திற்குச் சென்றார்கள்.

இதைப்போன்றே, எதிரிகளும் அவர்களது தலைவர் அபூ ஸுஃப்பானும் எதிரிலிருந்த ஒரு குன்றின்மீது ஏறினார்கள். அங்கு நின்றுகொண்டு தம்முடைய கடவுளரை நினைத்து, அபு ஸுஃப்யான் "ஹுபல் வாழ்க!" என்றார்.

இதைக் கேட்டுப் பெருமானாரவர்கள், "அல்லாஹு அக்பர்!"—அல்லாஹ் மகா மேலானவன்—என்று சப்தமிடும்படி முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

"அடுத்த ஆண்டில் பத்ரில் நாம் உங்களுடன் போரிடுவோம்!" என்றார் அபூஸுஃப்யான்.

"அதற்குச் சம்மதமே" என்று பெருமானாரவர்கள் மறுமொழி கூறினார்கள்.

இந்தப் போர் நடந்துகொண்டிருக்கையில் பெருமானாரவர்கள் ஆவி துறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு ஒரு முஸ்லிம் மாது மதீனாவிலிருந்து உஹுத் போர்க்களத்திற்கு வந்தார். அந்த மாது வரும் வழியில் அவரிடம், அவரது தந்தை போரில் மடிந்ததாகக் கூறப்படுகிறது! அப்பால் இன்னும் நடந்து வருகையில் கணவர் இறந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது! இனியும் நடக்கிறார். சகோதரர் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது! ஆனால் ஒவ்வொரு தடவையும், "எம்பிரான் நலமாயிருக்கிறார்களா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். பெருமானாரவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று தெரிந்து

ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார். "எனது கண்களால் எம்பிரானைப் பார்ப்பேன்" என்று தேடியலைந்து எம்பிரானைப் பார்த்தார். பார்த்தவுடன் அகமகிழ்ந்து, எம்பிரானைப் பார்த்து, "நீங்கள் உயிருடன் இருந்தால் எனக்கு எத்தகைய துன்பம் வந்தாலும் பொறுத்துக்கொள்வேன்" என்றார்.

ஹஸ்ரத் பிலால், உஹத் போரிலும், வழக்கம்போல் தொழுகைக்காக பாங்கு சொன்னார். நாயகமவர்கள் போர்க் களத்தில் இடும் கட்டளைகளை ஒலிபெருக்கிபோன்று முஸ்லிம் சிப்பாய்களுக்கு அறிவித்துக்கொண்டிருந்தார்.

## 8. அகழ் போரில்

எம்பெருமானார் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்தபொழுது அந்நகரில் பல யூதர்கள் இருந்தார்கள். முஸ்லிம்களுடன் சமாதான உடன்பாடு செய்துகொண்டாலும், அவர்கள் அப்பால் நயவஞ்சகர்களுடன் சேர்ந்துகொண்டு, எம்பெருமானாருக்கு இடையூறு செய்தார்கள். சதி செய்தார்கள். இறுதியாக, குடியரசின் தலைவராயிருந்த எம்பிரானைக் கொல்லவும் திட்டமிட்டார்கள். எனவே, அவர்கள் மதீனாவிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். சில யூதர்கள் ஸிரியா நாட்டுக்குச் சென்றார்கள். சிலர் மதீனாவுக்கு வடக்கேயுள்ள கைபர் (Khaibar) என்னுமிடத்திற்குச் சென்றார்கள். கைபருக்குச் சென்ற யூதர்கள், மக்காவாசிகளோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு முஸ்லிம்களைத் தாக்க மதீனாவுக்கு வந்தார்கள். மக்காவாசிகளின் தலைவர் அபூஸுப்யானும் இன்னும் பல கோத்திரத்தார்களும் சேர்ந்து மதீனாவுக்கு வந்தார்கள்.

முஸ்லிம்களும் தற்காப்புப் போர்செய்தார்கள். தங்களைச் சுற்றி அகழ் தோண்டினார்கள். அதனால், அந்தப் போருக்கு "அகழ்ப்போர்" என்று பெயர். அகழ் வெட்டிமுடிக்க இருபது நாட்கள் ஆகிவிட்டன. அது கடுமையான பனிக் காலம். ஆகாராதிகள் குறைவினாலும் பனியாலும் பட்டினி

யாலும் முஸ்லிம்கள் கஷ்டப்பட்டார்கள். எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. முஸ்லிம்கள் மூவாயிரவரே. ஆனால், எதிரிகள் இருபத்து நாலாயிரவர். அச்சமயம் நயவஞ்சகர்கள் முஸ்லிம்களைத் தனிமையாக விட்டுவிட்டு மதீனாவுக்குத் திரும்பிவிட்டார்கள்.

எதிரிகள் அகழைத்தாண்டி வந்து போரிடவில்லை. காத்திருந்தார்கள். பல நாட்கள் சென்றன. இறுதியாக, ஒருநாள் புயல் காற்றடித்தது. அவர்களுடைய கூடாரங்கள் அதனால் பெயர்த்தெறியப்பட்டன! பனியின் கொடுமை! எதிரிகளின் தலைவர்களுக்குள்ளே கருத்து வேற்றுமைகள்! ஒருவரை மற்றொருவர் நம்பவில்லை. எனவே, முஸ்லிம்களைத் தோற்கடியாமலே, அபூ ஸுஃப்யானும் மக்காவாசிகளும் திரும்பிப் போய்விட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் இந்தப் போரிலும் எம்பெருமானாருடன் இருந்தார்.

இதற்குப்பிறகு, மக்காவாசிகள் முஸ்லிம்களுடன் ஹுதைபிய்யா உடன்படிக்கை செய்து கொண்டார்கள். இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின்படி முஸ்லிம்களுக்குத் தாராளமாக எங்கும் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த உடன்படிக்கை முதலில் முஸ்லிம்களுக்குத் தோல்வியைப்போல் தோன்றியது. எனினும், அது அவர்களுக்கு வெற்றியளித்தது, மக்காவின் எதிப்பு நின்றுவிட்டது. முஸ்லிம்களின் தொகை அரபு நாட்டில் அதிகரித்துக்கொண்டே சென்றது.

## 9. கைபரில்

மதீனாவிலிருந்த நயவஞ்சகர்கள், இஸ்லாத்திற்கு உட்பகைவராயிருந்தார்கள். அவர்கள் மூலமாக, மக்காவாசிகளுக்கும் யூதர்களுக்கும் மதீனா முஸ்லிம்களைப் பற்றிய நிலைமையானது மறைமுகமாக அறிவிக்கப்பட்டது. கைபரில் குடியேறிய யூதர்கள் மக்காவாசிகளுடன் சேர்ந்து எம்பெருமானாருக்கு விரோதமாக நடவடிக்கைகள் எடுத்தார்கள். எனவே, அவர்கள் வந்து

மதீனுவைத் தாக்குமுன்னரே, பெருமானுரவர்கள் அவர்களுடைய மத்தியஸ்தானமான கைபர் கோட்டையை முற்றுகையிட்டார்கள். முற்றுகை இரண்டு மாதகாலம் நீடித்தது. முஸ்லிம்கள் எதிர் பாராத துன்பங்களுக்கு ஆளானுர்கள். இறுதியாக கோட்டையைத் தாக்க எம்பிரான் ஒரு நாளையும் குறிப்பிட்டார்கள்.

"நான் இன்று இஸ்லாமியக் கொடியை எவரிடம் கொடுக்கப் போகிறேனே, அவர் கைபரை வென்ற பிறகே திரும்புவார்!" என்றுர்கள்.

"யாரிடம் கொடி கொடுக்கப்படுமோ!" என்று எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். எம்பெருமானுரவர்கள் நான்கு பக்கங்களிலும் பார்த்தார்கள். ஹஸ்ரத் அலீயை அழைத் தார்கள். அவரிடம் இஸ்லாமியக் கொடியைக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் அலீ கொடியை வாங்கினுர்; முன்னேறினுர். முஸ்லிம் சேனை அவரைப் பின் தொடர்ந்து சென்றது. கோட்டைத் தாக்கப் பட்டது. அன்று ஹஸ்ரத் அலீ அற்புதமான வீரச்செயல்கள் புரிந்தார். கைபர் கோட்டைக் கதவை அப்படியே பெயர்த் தெடுத்து எறிந்துவிட்டார்! கோட்டை வெல்லப்பட்டது.

சீருப் புராணத்திலே, உமறுப் புலவர், இந்த ஹஸ்ரத் அலீயை,

> படிகிடு கிடென நாக முடிநெறு நெறென வாரி
> படுதிரை யழையதாகவே
> வடவரை யசையதான முகடுடை படவருத
> மழைமுகில் சிதறியோடவே
> அடையலர் செடிகள் கோடி யிடுபடு படலதூளி
> யலரியி னுடலின் மூழ்கவே
> கடமிடு கடினவாசி மிசைவரு சமரசூர
> நரர்புலி அலீயை ஓதுவாம்.

என்று புகழ்கின்றுர்.

ஹஸ்ரத் பிலால் இந்தப் போரிலும் எம்பிரானுடன் இருந்தார்; பணியாற்றினார்.

## 10. மக்கா வெற்றி

ஹுதைபிய்யா (Hudaibiyya) உடன்படிக்கையை மக்கா வாசிகள் உடைத்தெரிந்தார்கள். எனவே, எம்பிரான் மதீனாவிலிருந்து முஸ்லிம்களுடன் சென்று, கத்தியின்றி, இரத்தமின்றி மக்காவை வென்றார்கள்.

அப்பொழுது, ஹஸ்ரத் பிலால், பெருமானாரவர்களுடைய தோழமையில் இருந்தார். மக்காவிலுள்ள கஃபாவில் பூஜிக்கப்பட்ட பல விக்கிரகங்களையும் நீக்கிவிட்ட பிறகு, எம்பெருமானார் ஹஸ்ரத் பிலாலை அழைத்து பாங்கு சொல்லும்படி கட்டளையிட்டார்கள். உடனே, ஹஸ்ரத் பிலால் கஃபாவின் மேல் தளத்தின்மீது ஏறி நின்றார். "அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!" என்று பாங்கு சொன்னார்.

ஒரே தெய்வ வணக்கத்திற்காக இப்ராஹீம் நபியால் உலகில் முதலாவதாகக் கட்டப்பட்ட வணக்க வீடான புனித கஃபாவிலே, வெகுகாலம் அது விக்கிரகக் கோவிலாக இருந்த பிறகு, அன்று ஒரு அபிஸீனிய அடிமையின் மூலமாக, "அல்லாஹு அக்பர்! ஏகனான இறைவன் மகாபெரியவன்" என்ற இன்னிசைக் குரல் எழுப்பப்பட்டு எதிரொலித்தது.

தங்களை மேல்குலத்தாரென்று கருதிய குறைஷ் கோத்திரத்தாருக்கு இந்தக் கருநிறமான அபிஸீனிய அடிமை பிலால், தங்களுடைய கடவுளர்கள் திருக்கோவில் கொண்ட கஃபாவின் மீது ஏறிநிற்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்! அன்று அவர்களுக்குக் கண் திறந்தது! இனவேற்றுமை, ஜாதி வேற்றுமை, குல வேற்றுமை, கோத்திர வேற்றுமை, பண வேற்றுமை முதலியவற்றை இஸ்லாம் அடியோடு அழித்துவிட்டது என்று அறிந்தார்கள். இஸ்லாம் மார்க்கத்திலே ஒழுக்கம், இறைநேசம் இவ்விரண்டும் மனிதப் பண்பாடுகளாகக் கருதப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொண்டார்கள்.

## 11. தலைவரை இழந்தார்!

மக்கா வெற்றியானது அரபநாட்டு வெற்றியின் முன்னோடியாக இருந்தது. மக்காவிலுள்ளவர்களையே தங்களுக்குத் தலைவராக அக்கால அரபியர் கருதியிருந்தார்கள். மக்கா எந்த வழியில் செல்லுமோ அந்த வழியில்தான் அவர்கள் செல்வார்கள். மக்கா வெல்லப்பட்டு, மக்காவாசிகள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டவுடன், ஒவ்வொரு அரபியக் கோத்திரமும் எம்பெருமானாரிடம் தூதுக்குழுவை அனுப்பி இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்டது. இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கு இதுவரை ஏற்பட்டிருந்த தடைகள் இனிமேல் தாமாகவே நீங்கிவிட்டன. இவ்வாறு படிப்படியாக அரபு நாடெங்கும் இஸ்லாம் மார்க்கம் பரவிவிட்டது. எம்பெருமானாரை அரபியர் அனைவரும் தங்கள் அரசியல் தலைவராகவும் ஆத்மீக வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டார்கள்.

பெருமானாரவர்கள் மதீனாக்கு வந்து பத்து ஆண்டுகள் கழிந்தன. அந்த ஆண்டில் பெருந்திரளான முஸ்லிம்களுடன் மதீனாவிலிருந்து மக்காவிற்குச் சென்று இறுதி ஹஜ் செய்தார்கள். அப்பொழுது அரபாத் குன்றின்மீது அமர்ந்து பெருமானாரவர்கள் மக்களுக்கு அறவுரை ஆற்றினார்கள். அங்கிருந்து மதீனா திரும்பிய பிறகு அவர்களுக்கு காய்ச்சல்—வெப்பு நோய் உண்டாயிற்று.

வழக்கம்போல் ஹஸ்ரத் பிலால் பாங்கு சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு நாள் காலையில் பாங்கு சொன்னார். பள்ளிவாயிலுக்குப் பக்கத்திலிருந்த வீட்டில் பெருமானாரவர்கள் வசித்துவந்தார்கள்: பாங்குக் குரல் கேட்டவுடன் பள்ளிவாயிலுக்கு வந்துவிடுவார்கள். ஆனால், அன்று வரவில்லை. எனவே, ஹஸ்ரத் பிலால். பெருமானாரவர்கள் வீட்டுக் கதவின் அருகில் நின்றுகொண்டு, "அஸ்ஸல்லாத். யாரஸுலல்லாஹ்!" (அல்லாஹ்வின் தூதரே, தொழுகைக்கு) என்றார். ஆனால், தாங்கள் தொழுகைக்கு எழுந்து வரமுடியாமல் பலவீனமாக இருப்பதாகப் பெருமானாரவர்கள் ஹஸ்ரத் பிலாலிடம் கூறினார்கள்.

கூட்டுத்தொழுகைக்குத் தலைவராக நின்று அன்று தொழ வைக்கும்படி ஹஸ்ரத் உமருக்கு உத்திரவிட்டார்கள்.

ஹஸ்ரத் பிலாலுடைய கண்களில் கண்ணீர் பொங்கியது! அழுதுகொண்டே திரும்பினர்! அங்கிருந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் பிலாலிடம் விசாரித்தார்கள். "தொழுகை நடத்த எம்பிரானுக்கு உடல் வலிமை இல்லை!" என்றார். அங்கிருந்த ஹஸ்ரத் உமரிடம் சென்று தொழுகை நடத்தும்படி கேட்டுக்கொண்டார்.

ஆனால், "ஹஸ்ரத் அபூ பக்ர் இருக்கும்பொழுது நான் இமாமாக-தொழுகைத் தலைவராக-இருக்கமுடியாது. இங்கு அபூ பக்ர் இருக்கிறார் என்று பெருமானாருக்கு நீர் தெரிவியும்" என்றார் ஹஸ்ரத் உமர்.

ஹஸ்ரத் பிலால் இதைப் பெருமானாருக்குத் தெரிவித்தார். எனவே, அன்று ஹஸ்ரத் அபூ பக்ர் முஸ்லிம்களுக்கு இமாமாக நின்று தொழவைக்கவேண்டுமென்று பெருமானார் கோரினார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் அவ்வாறே பத்து நாட்கள்வரை தொழுகை நடத்தினார்.

இதற்கிடையில், பெருமானாரவர்களது நோய் அதிகரித்துக் கொண்டே வந்தது. பத்து நாட்கள் கழிந்தன. அதற்குப் பிறகு, பெருமானாரவர்கள் பள்ளிவாயிலுக்கு வந்து தொழவைத்தார்கள். எல்லா முஸ்லிம்களும் பெருமானாரைக் கண்குளிரக் கண்டு களித்தார்கள்.

தொழுகை முடிந்தது. பெருமானாரவர்கள் ஒரு சிறு சொற்பொழிவாற்றினார்கள். அதில் அவர்கள் இந்த உலகை விட்டுப் பிரியப்போவதாக மறைமுகமாகக் கூறினார்கள். இந்த உலகின் ஒவ்வொரு மூலையிலும் இஸ்லாம் மார்க்கத்தின் தூதைப் பிரச்சாரஞ் செய்யும்படி அங்கிருந்தோரிடம் கோரினார்கள் "முந்திய நபிமார்களைப் பின்பற்றியோர், அந்த நபிமார்களின் அடக்க ஸ்தலங்களை வணக்க ஸ்தலங்களாக ஆக்கிவிட்டதைப்

போன்று என்னுடைய அடக்க ஸ்தலத்தையும் செய்யாதீர்கள்" என்று எச்சரிக்கை செய்தார்கள். பிறகு, அங்கிருந்து தங்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

வியாதி திடீரென்று அதிகரித்தது. ஹிஜ்ரி பதினொன்றும் ஆண்டு, ரபியுல் அவ்வல் மாதம், பன்னிரண்டாம் நாள் தங்கள் அறுபத்து மூன்றும் வயதில், எம்பிரான் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள்.

அன்றும் ஹஸ்ரத் பிலால் பாங்கு சொன்னார்.

நானில வாழ்வை நான்மறை வாழ்வை
நபிகளின் வாழ்வை என் இதயந்
தானில வாழ்வைத் தபோதனர் வாழ்வைச்
சான்றவர் வாழ்வை மேலோகப்
பானில வாழ்வைப் பாதுகை வாழ்வை
மதிமதீ னாநகர் வாழ்வைக்
கானில வாழ்வை முகமது நபியைக்
கண்களால் என்று காண்குவனே.

(முதுமொழிமாலை—உமறுப் புலவர்)

அருளாளன் அன்புடையோன் அல்லாஹுவின் கருணைப்
பெருங்கொடையாய் வந்துதித்த பெருமானே நாயகமே!
உயிரிழந்து உணர்விழந்து உலைந்திருந்த பாருலகம்
உயர்வடையும் வழிகாண உருகிநின்ற நாயகமே!
ஒன்றிறைவன் ஒன்றுகுலம் ஒன்றுநிறை என்றகொள்கை
மன்பதைகள் பிணிநீக்கும் மருந்தாக்கும் நாயகமே!
"செங்கதிரும் தண்மதியும் சேர்த்துகையில் தந்திடினும்
எங்கொள்கை விடமாட்டேன்!" என்றுரைத்த நாயகமே!
அனல்வீசும் மணல்மீது அருமைபிலால் உடல்கருகும்
கனல்வீசும் காதையினுல் கண்கலங்கும் நாயகமே!

கள்ளிரவில் இல்லத்தை நண்ணிஉயிர் குடிக்கவந்த
உள்ளமிருள் ஊனர்களால் ஊர்துறந்த நாயகமே!

உயிராடும் போதினிலும் உளனன்றோ இறையென்ற
அயர்வில்லாத் திடமனந்தான் அரிதரிது நாயகமே!

இறையொருவன் பிறப்பில்லான் இறப்பில்லான்
இணையில்லான்
நிறைவனைத்தும் உடையனென நவின்றநபி நாயகமே!

பசிதணிக்கக் கல்கட்டிப் பருங்கயிற்றுக் கட்டிலின்மேல்
பசுமேனி நோவடையப் படுத்திருந்த நாயகமே!

தெருவீடையே பெருநாளில் தேம்பியழும் அனாதையினை
அருமையுடன் அணைத்துவந்து அலங்கரித்த நாயகமே!

வழிப்போக்கன் உணவருந்தி வள்ளலுமது படுக்கையிலே
கழித்தமலம் கைமலரால் கழுவியநன் னாயகமே!

"என்னருமை முஹம்மதைப்போல் எழிலுருவம்
கண்டதில்லை"
என்றேஅபூ ஹுறைறரவும் எடுத்துரைத்தார் நாயகமே!

கார்குலத்தைக் கண்டவுடன் களித்தாடும் மயில்போலும்
சீர்முகத்தைக் கண்டதோழர் சிறப்படைந்தார் நாயகமே!

இருட்டறையில் இடறிவிழும் இனத்தவர்க்கு இஸ்லாத்தின்
பெருவிளக்கைப் பிடிக்கவந்த பெருமானே நாயகமே!

அறுபத்தி மூன்றாண்டு அருமுறையில் வாழ்ந்துநெறி
நிறுவியபின் மறைவதற்கோ நிலத்துதித்தீர் நாயகமே!

இணையற்ற ஒளிமணியே! இதயத்தின் கண்மணியே!
துணையற்றோன் நபிமணியே! தூய்தான நாயகமே!

(கவிஞர் அப்துல் கபூர்)

என்றெல்லாம் இதயம் குமுறி பிலால் (ரலி) அலறியிருப்பார்!

## 12. ஹஸ்ரத் அபூ பக்ருடன்

இனி, ஹஸ்ரத் பிலாலுடைய வாழ்க்கையின் மற்ஞெரு படலம் தொடங்குகின்றது. எம்பெருமானுர் இல்லாத இவ் வுலகிலே பிலாலுக்கு இன்பமேயில்லை. பெருமானுரவர்களின் தோழர்களெல்லாம் ஹஸ்ரத் பிலாலுக்கு ஆறுதல் அளித்தார்கள். அவரது துக்கத்தை நீக்க அரும்பாடுபட்டார்கள். ஆனுல், "நாயகமே! நாயகமே!" என்று பிரிவாற்ருமையால் அவர் மனம் நொந்தார். பிலால் தமக்கெனச் சமைத்துக்கொண்ட பிலாலி உலகமே வேறு. அஹமத் நபியவர்கள், பிலாலின் அகமதில் குடிகொண்டிருந்தார்கள் அந்த அற்புத வாழ்க்கை யானது மலரும் அரும்பும் போன்றது, பூவும் மணமும் போன்றது!

பிலாலுக்கு துன்ப வாழ்க்கை—துயரம் நிறைந்த— சோகம் பொங்கிய—வாழ்க்கை ஆரம்பமாயிற்று. மதீனுவின் தெருக் களிலே பெருமானுரவர்களைக் கண்ட கண்கள் அந்த உருவத்தைக் காணுமல் தவித்தன. அண்ணல் நபியின் அமுத மொழிகளைக் கேட்ட காதுகள் வேறு எதையும் கேட்க மறுத்தன. மதீனுவின் தெருக்களிலோ வீடுகளிலோ பிலாலுடைய கண்களுக்கு எழி லொன்றும் எட்டவில்லை. எல்லாம் பாலைவனமாகவே தோன்றியது. பள்ளிவாயிலில் தங்கள் தோழர்களுடன் நாயகமவர்கள் உட்கார்ந்து உபதேசஞ் செய்யுமிடத்தை அவர் பார்த்தவுடன் கண்மாரி பெய்து விடுவார். பள்ளிவாயிலில் மிம்பர் என்னும் உபதேச மேடையைப் பார்ப்பார். "என் மஹ்மூதைக் காண வில்லையே!" என்று மனமுருகி அழுவார். எத்தகைய இன்பக் காட்சியும் துன்பக் காட்சியாகவே அவருக்குத் தோன்றியது! அவரது வாழ்க்கையின் ஏட்டின் இறுதிஒலை வந்துவிட்டதாகவே தெரிந்தது!

மதீனு நகரம் ரோஜா மலர்கள் நிறைந்த பூங்கா! அதில் அழகிய ரோஜாவே நமது நாயகம்! அதைக் கண்டுகளிக்கும் புல்புல் பறவையே பிலால்! "அந்த ரோஜா-அந்த வசந்த

காலம்-இனி வருமோ? வாசமலர்கள் பூத்திடுமோ? அந்த இன்னிசையும் இன்பமும் இனி எய்துவனோ? என்று ஏங்கினார் பிலால்! என்றென்றும் எம்பிரானைக் கண்குளிரக் கண்டு கொண்டிருப்பதே அவருக்கு இன்பம்! அப்பொழுதுதான் அவருக்குப் பசிதீரும்; தாகம் தீரும்; உணர்ச்சி உண்டாகும். இன்பம் இயங்கும்; நரம்புகளில் முறுக்கேறும்; உள்ளத்திலே உவகை உண்டாகும்.

உவைஸ் கரனி என்பவர் நாயகத்தைப் பார்க்காமலே நேசித்தவர். பழக்கமில்லாமலே நபி பிரானுடன் நட்பையும் காதலையும் வளர்த்தவர். வெகுதூரத்தில் வேற்றூரில் இருந்தார். இணைப்பினாலும், உணர்வின் ஒற்றுமையாலும் ஒன்றுபட்டார்; உவைஸ் கரனி ஆத்ம நட்பினால்-பாசத்தினால்-புனிதவாழ்க்கையால் பெருமானாருடன் இணைக்கப்பட்டவர். ஆனால், உவைஸ் கரனி பெறமுடியாத பேற்றை ஹஸ்ரத் பிலால் பெற்றார். அனுபவித்தார். இன்புற்றார். இணைபிரியாமல் இறுதி நபியின் தோழமையில் இருந்தார். இப்பொழுது தம்மைவிட்டு மறைந்த மணிவிளக்கை, மாபெருந் தலைவரை, ஞான சூரியரை, நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தார்.

எனவே, மதீனாவை விட்டு எங்கேயாவது ஓடிவிட வேண்டுமென்று முடிவுசெய்தார். ஸிரியா நாடு சென்று அங்கு இஸ்லாம் மார்க்கத்தின் விரோதிகளுடன் புனிதப் போர்புரிந்து உயிரைவிடலாமென்று தீர்மானித்தார்.

ஹஸ்ரத் அபூ பக்ர் கலீபாவானார். கலிபாவிடம் பிலால் சென்றார்.

பிலால்:—இறைதூதரின் பிரதிநிதியே! மதீனா வாழ்க்கையில் எனக்கு இன்பமில்லை! என் நெஞ்சில் நிறைந்த நபி

மணியுடன் தொடர்புகொண்ட இடங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்குத் துக்கம் மேலிடுகின்றது! என்னால் பொறுக்கமுடியவில்லையே! "இறைவன் பாதையில் ஜிஹாத் செய்தல் மூமின்-விசுவாசியுடைய மேலான கடமை" என நபி பெருமானாரவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆகையால், மரண தூதர் வந்து என்னை அழைக்கும் வரை. இந்த நற்பணியையே என் வாழ்க்கையின் கடமையாகச் செயலாற்ற விரும்புகின்றேன். ஆகையால் ஸிரியாவுக்குச் செல்ல எனக்கு அனுமதிகொடுங்கள்.

அபூ பக்ர் :— பிலாலே நீர் சொல்வதெல்லாம் உண்மைதான். ஆனால், நீர் என்னுடன் இருக்கவேண்டுமென்று நான் உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிலால் :— நான் ஒரு காலத்திலே அடிமையாயிருந்தேன். நீங்கள் "அல்லாஹ்வுக்காக" என்னை விடுதலை செய்தீர்களல்லவா? அப்படியானால், இங்கிருந்து போக எனக்கு அனுமதி கொடுங்கள், ஆனால், உங்களுடன் நான் இருக்கவேண்டுமென்று என்னை விடுதலை செய்யாதிருந்தால் என்னைப் போகவிடவேண்டாம் நான் ஸிரியா சென்று அல்லாஹ்வின் பாதையிலே புனிதப்போர் புரிந்து, "ஷஹீத்" என்னும் பதவிபெற விரும்புகிறேன்.

அபூ பக்ர் :— நான் உம்மை ஆண்டவனுக்காகத்தான் விடுதலை செய்தேன். ஆனால், எனக்கு வயதாகிவிட்டது. மரணம் சமீபித்துவிட்டது. நீர் என்னுடன் இருக்கவேண்டுமென்று நான் உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீர் என்னைவிட்டுப் பிரிந்திருப்பதை நான் சகிக்கமுடியாது.

எனவே, உள்ளத்தைத் தொடும் இந்த உணர்ச்சிமிக்க உயர்மொழி கேட்டு ஹஸ்ரத் பிலால் மதீனாவிலே இருந்தார். ஹஸ்ரத் அபூ பக்ர் மரணமடைந்த பிறகு, ஹஸ்ரத் உமர் கலீபாவானார். அவரிடம் சென்று, ஸிரியாவுக்குச் சென்று ஜிஹாத் செய்ய பிலால் அனுமதி பெற்றுக்கொண்டார்.

ஹஸ்ரத் அபூ பக்ரைப் போலவே, ஹஸ்ரத் உமரும் தடுக்க விரும்பினர். ஆனால், ஜிஹாத் செய்யவேண்டும் என்னும் ஆர்வமும் உணர்ச்சியும் ஹஸ்ரத் பிலாலின் உள்ளத்தில் மிகைத்து விட்டது. ஆகையால், பலமுறை கேட்டுக்கேட்டு, இறுதியாக கலீபாவின் அனுமதி பெற்றார்.

ஒரு கம்பளியைத் தோளின்மீது போட்டார். புறப்பட்டார். ஸிரியா வந்தார். ஸிரியாவிலே, ரோமர்களுடன் நடந்த போர்களில் பங்கெடுத்துக்கொண்டார்.

அவர் ஸிரியாவுக்குச் சென்றபொழுது, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்த இந்த முன்மாதிரியான காதலரைக் கண்ணால் கண்டுகளித்து இன்பம் பெறுவதற்காக மக்கள் திரள் திரளாக வந்து குவிந்து விடுவார்கள். "இந்த விந்தை மனிதர் யார்? இவர் எங்கிருந்து வருகிறார்? இவர் எங்கு செல்கிறார்? இவர் கண்ணீர் வடிக்கிறாரே—யாரை நினைத்து? இவர் துயரக் கடலில் மூழ்கி இருக்கிறாரே—ஏன்? எதற்காக இவர் அலைந்து கொண்டிருக்கிறார்?" என்று தங்களுக்குள் பேசிக்கொள் வார்கள்.

பிலால் இவற்றையெல்லாம் கேட்டார். "இங்கு எனக்கு ஒரு வேலையுமில்லை. இங்கு வருவதில் எனக்கு தனிப்பட்ட நோக்கமும் இன்பமும் கிடையாது. நான் தேடியலைவது நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே. அவர்களே எனது இன்பம் அவர்களே எனக்கு எழில். நான் யாரைத் தேடுகிறேனோ அந்த மகான் ஓர் ஏழை. ஆனால், இரு லோகங்களுக்கும் அரசர். ஜின்களுக்கும் மனிதர்களுக்கும் அரசர். அந்த மகான் திடீரென்று என்னை விட்டுப் பிரிந்து விட்டார்கள். நான் அவர்களைத் தேடுகிறேன்" என்றார்.

மக்கள் இதைக் கேட்டு, "ஆம். எங்களுக்குத் தெரிந்து விட்டது. நீர் திருநபியவர்களைத் தேடுகிறீர். நீர் நபியவர்

களின் மீது தூய்மையான காதல் கொண்டவர். நீர் பிலால். நீர் இங்கு வருமுன்னரே உமது புகழ் பரவிட்டது'' எனக் கூறினார்கள்.

ஆனால், பிலாலோ பெயரும் புகழும் வேண்டாதவர். மதீனநகரம் பாழடைந்த காடாகவே அவருக்குத் தோன்றியது. எனவேதான் வேறு புகலிடம் தேடினார். ஸிரியா வந்தார். ஸிரியாவிலும் அவருக்கு இன்பமில்லை. சாந்தி கிடைக்கவில்லை.

## 13. எருஸலம் நகரில்

பைத்துல் முகத்தஸ் என்னும் எருஸலம் (Jerusalem) நகரமானது யூதர்களாலும், கிறிஸ்தவர்களாலும், முஸ்லிம்களாலும் புனித நகரமாகப் போற்றப்படுகின்றது. இஸ்லாத்தின் இரண்டாம் கலீபா ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் காலத்திலே இது முஸ்லிம் களால் வெல்லப்பட்டது. ஹஸ்ரத் காலித் பின் வலீத். ஹஸ்ரத் ஸஅத் பின் அபீவக்காஸ் போன்ற பெருந்தளபதிகளே, ஸிரியா யுத்தத்தில் தளபதிகள். எனினும் ஹஸ்ரத் அம்ரு பின் ஆஸ் என்பவருக்கே இந்நகரை வெல்லும் பெருமை கிடைத்தது. எருஸலம் நகரிலிருந்த கிறிஸ்தவ தலைமைப் பாதிரியார் அந்த நகரத்தை தளபதி அம்ரு பின் ஆஸிடம் ஒப்படைக்க மறுத்து, "நகரத்தின் திறவுகோலை முஸ்லிம்களுடைய கலீபாவிடமே கொடுப்பேன்" என்று விண்ணப்பஞ் செய்தார். எனவே அதற்கு உடன்பட்டு, கலீபா உமர் மதீனாவிலிருந்து புறப் பட்டு, சரித்திரப் புகழ்பெற்ற பிரயாணஞ் செய்து எருஸலம் வந்தார்.

அவருடன் மெய்க்காப்பாளரும், பாதுகாப்பு வசதிகளும் இல்லாமல், ஒரேயொரு பணியாளுடன், ஓர் ஒட்டகத்தின் மீது மாறி மாறி ஏறிக்கொண்டு, பாலைவனத்தைக் கடந்து வந்தார். ஒட்டகம் ஒன்றே. ஆகையால், கலீபா ஏறிவரும் பொழுது பணியாள் நடப்பதும், பணியாள் ஏறிவரும் பொழுது கலீபா அந்தக் கானல் வெளியில் நடப்பதுமாக

வந்துசேர்ந்தார்கள்! அப்பொழுது (ஹி. 16) இராணுவ அதிகாரிகள் ஜாபியா (Jabia) என்னுமிடத்தில் கலீபாவை வர வேற்கச் சென்றார்கள். அவர்களுடன் ஹஸ்ரத் பிலாலும் சென்று கலீபாவை வரவேற்றார். எருஸலம் நகரை கலீபா பார்வையிடும் பொழுது ஹஸ்ரத் பிலாலும் உடன் சென்றார்.

அப்பொழுது நடுப்பகல் (லுஹர்) தொழுகை நேரமாகி விட்டது. ஹஸ்ரத் பிலால் பாங்கு சொல்லவேண்டுமென்று மக்கள் கலீபாவைக் கேட்டுக்கொண்டார்கள். கலீபாவும் வேண்டுகோள் விடுத்தார். பிலால் கீழ்ப்படிந்தார். பெருமானாரவர்கள் காலத்திற்குப் பிறகு, அவர் அன்று பாங்கு சொன்னார்.

"அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்" என்று பிலால் ஆரம்பித்தார். அதைக் கேட்டவுடன் அங்கிருந்த முஸ்லிம் களின் உள்ளத்திலே ஒரு உயரிய உணர்ச்சி உண்டாயிற்று.

"அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!" என்று இரண்டாம் தடவை உயர்ந்த குரலில் சொன்னார்.

"அஷ்ஹது அன் லாஇலாஹா இல்லல்லாஹ்
—அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்"

என்று கூறியவுடன் அதுவரை அடக்கிவைக்கப்பட்ட சோக உணர்ச்சி ததும்பிக் கண்ணீராக மாறி கன்னங்களின் வழியாக வடிய ஆரம்பித்தது! மக்களுடைய இருதயங்கள் துண்டு துண் டாகி விடுவதுபோலத் தோன்றியது! நாயகத் தோழர்களெல்லாம், தாங்கள் பெருமானாரவர்களுடன் வாழ்ந்த நாட்களை நினைத்து நினைத்துக் கண்ணீர் வடித்தார்கள். அபூ உபைதா, முஆத் பின் ஜபல் போன்ற தோழர்கள் மெய்மறந்தார்கள். வெகு நேரம் வரை கலீபா உமர் பேச்சற்ற நிலையிலிருந்தார். மூச்சுத் திணறடித்து விட்டது!

இந்த நிலைமையைக்கண்ட ஹஸ்ரத் பிலால், பாங்கு சொல்வதை நிறுத்தவும் விரும்பினார். ஆனால், ஒருவாறு

சொல்லி முடித்தார். பாங்கு முடிந்தபிறகு கலீபா உமர் கூட்டுத் தொழுகையை நடத்தினார்.

அதற்குப் பிறகு, கலீபா உமரிடம் அனுமதி பெற்று, ஹஸ்ரத் பிலால், ஸிரியா நாட்டிலே தமது இஸ்லாமிய சகோதரர் அபூ ரவீஹா என்பவருடன், கவ்லான் என்னும் சிற்றூரில் நிரந்தரமாக வசிக்கலானார்.

## 14. திருமணம்

மதீனவாசியும் காயகத் தோழருமான அபூ தர்தா அன்ஸாரீ என்பவரின் குடும்பம் அதற்கு முன்னதாக அங்கு குடியேறியிருந்தது. அவர்களிடம் சென்று, ஹஸ்ரத் பிலால் தாம் அந்தக் குடும்பத்தில் திருமணத் தொடர்புவைத்துக் கொள்ள விரும்புவதாகத் தமது எண்ணத்தை வெளியிட்டார். அவர், மணமகளின் குடும்பத்தாரை நோக்கி,

,, நாங்கள் இருவரும் இறைவனை நிராகரிக்கும் காபிர்களாக இருந்தோம். ஆண்டவன் எங்களுக்கு நல்வழி காட்டினான். நாங்கள் அடிமைகளாக இருந்தோம். ஆண்டவன் எங்களுக்கு விடுதலை அளித்தான். நாங்கள் தேவையுள்ள ஏழைகளாக இருந்தோம். இறைவன் எங்களைப் பணக்காரர்களாக்கினான். இப்பொழுது நாங்கள் உங்கள் குடும்பத்துடன் தொடர்பு கொண்டு ஒன்றாகிவிடும் விருப்பமுள்ளோராக இருக்கின்றோம். நீங்கள் எங்களுக்கு உங்கள் புத்திரிகளைத் திருமணம் செய்து கொடுத்து எங்கள் ஆசையைப் பூர்த்தி செய்வீர்களானால், இறைவனுக்கு நன்றி! இல்லாவிட்டாலும் நாங்கள் உங்கள்மீது குறைகூற மாட்டோம்" என்றார்.

இஸ்லாம் மார்க்கமானது, நிறத்தாலும் குலத்தாலும், செல்வத்தாலுமுள்ள வேறுபாடுகளை அழித்துவிட்டதல்லவா? எனவே, அந்த அரபிக் குடும்பத்தார், நீக்ரோ அடிமையான, கருத்த மேனியும், பருத்த உதடுமுள்ள பிலாலுடைய வேண்டுகோளுக்கிணங்கி, மகிழ்ச்சியுடன் தங்கள் புதல்விகளை

அவ்விருவருக்கும் திருமணம் செய்துகொடுத்தார்கள். திருமணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் பிலால் ஸிரியாவில் வசிக்கலானார். ஆனால், புனிதப் போர்களில் பங்கெடுத்து, இஸ்லாமியப் பணி செய்துகொண்டே இருந்தார்.

## 15. தூது செல்லல்

கலீபா உமர் காலத்திலே ஸிரியா நாட்டிலிருந்த இஸ்லாமிய சேனைக்கு அபூ உபைதா என்பவர் சேனாதிபதியாயிருந்தார். முஸ்லிம் சேனையில் ஐயாயிரம் படைவீரர்களே இருந்தார்கள். அவர்களது எதிரிகளான ரோமர்களது சேனையிலோ பன்மடங்குப் போர்வீரர்கள் நிறைந்திருந்தார்கள். எதிரிகளின் எண்ணிக்கையைக் கண்டு முஸ்லிம்கள் மனந்தளர்வதைக் கண்டு, தளபதி அபூ உபைதா உணர்ச்சி ததும்பிய வீரஞ் செறிந்ததொரு சொற்பொழிவாற்றினார். இதன் பலனாக முஸ்லிம் வீரர்கள் வீறுபெற்றெழுந்தார்கள். எதிரிகளை எதிர்ப்போம்; இருப்போம், அல்லது இறப்போம் என்று புறப்பட்டார்கள்!

இதைக் கண்டு ரோமர்கள் பயந்துவிட்டார்கள். முஸ்லிம்களுக்கு வெளியிலிருந்து உதவி வந்துவிட்டதென்று அவர்கள் கருதினார்கள். இச்செய்தி ரோம சக்ரவர்த்திக்குத் தெரிந்தது. இனி, முஸ்லிம்களுடன் சமாதானம் செய்துகொள்ளலே நலம் என்று அவர் கருதினார். தமது சேனைத்தலைவர் ஒருவரை அபூ உபைதாவிடம் அனுப்பி, போர் நிறுத்தப் பேச்சுக்கள் ஆரம்பித்தார். முஸ்லிம்களின் சார்பில் ஓர் உயர்குடும்பத்தில் பிறந்த, அறிவு நிறைந்த, நாவன்மையுள்ள தூதரைத் தம்மிடம் அனுப்ப வேண்டுமென்றும் ரோம சக்ரவர்த்தி கேட்டுக்கொண்டார்.

அந்தப் பணியாற்ற ஹஸ்ரத் பிலால் முன்வந்தார். அவரிடம் அந்த தூதருக்கேற்ற உயர்ந்த ஆடைகள் இல்லை. உடலை மறைக்க ஓர் அங்கியும், தலையை மறைக்க ஓர் தலைப்

பாகையும் அணிந்துகொண்டு புறப்பட்டார். வாளைத் தோளில் தொங்கவிட்டார். கையில் ஒரு பிரம்பு இருந்தது. ரோம சக்ரவர்த்தியிடம் சென்றார். ஆனால், ஓர் அடிமைக்குத் தமது அரசவையில் இடங்கொடுக்க முடியாதென்று ரோம சக்ரவர்த்தி மறுத்துவிட்டார். எனவே, ஹஸ்ரத் பிலால் மனவருத்தத்துடன் திரும்பினார்.

ஹஸ்ரத் பிலால் இவ்வாறு தூதராகச் சென்றமையால் இரண்டு விதமான நன்மைகள் ஏற்பட்டன. முதலாவது, உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவம் இன்னதென்று எதிரிகளுக்குத் தெரிந்தது. இஸ்லாம் மார்க்கத்தில் நிறத்தாலும், குலத்தாலும் பணத்தாலும், பதவியாலும் ஒருவன் உயர்ந்தோனாக மாட்டான். எல்லா மக்களும் ஆண்டவன் சந்நிதானத்தில் சமமானவர்களே. ஒழுக்கமுள்ளவனே இஸ்லாத்தில் உயர்ந்தவன். ஹஸ்ரத் பிலாலை ரோம சக்ரவர்த்தியிடம் தூதராக அனுப்பி, முஸ்லிம்கள் இந்த இஸ்லாமியக் கொள்கையை நடைமுறையில் விளக்கினார்கள்.

இரண்டாவது தாமே நாகரிகத்தின் உச்ச நிலை அடைந்தோரெனவும், அரபிய மக்களெல்லாம் காட்டுமிராண்டிகள் எனவும் கருதியிருந்த ரோமர்களுக்கு இந்தத் தூது ஒரு படிப்பினையாயிருந்தது. ரோமர்களை இழிவானவர்கள் என்று நினைத்தே தங்களில் உயர்குலத்தோரைத் தூதராக அனுப்பாமல் ஒரு கருத்த அபிஸீனிய அடிமையை முஸ்லிம்கள் அனுப்பிவிட்டார்கள் எனவும் ரோமர்கள் எண்ணினார்கள். மேலும், முஸ்லிம்கள் இப்பொழுது வலிமை பெற்றுவிட்டதால், இவ்வாறு செய்திருக்கின்றார்கள் எனவும் தங்களை இழிவாக மதிக்கின்றார்கள் எனவும் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைப்பது நிச்சயமெனவும் எதிரிகள் நினைத்தார்கள். ஆகவே, முஸ்லிம்களைக் கண்டு எச்சமயமும் அச்சங்கொள்ள ஆரம்பித்தார்கள். இந்த அச்சம் முஸ்லிம்களுக்கு அனுகூலமாயிருந்தது.

அதற்குப் பிறகு நடந்த போரில் இந்த அச்சமே ரோமர்களைத் தோற்கடித்தது. ரோமத் தளபதிகள் பலர் அந்தப் போரில்

கொல்லப்பட்டார்கள். இரவில், இருள் நிறைந்த வேலையில் போர்க் களத்தைவிட்டு அவர்கள் ஓடிப்போனார்கள்.

## 16. முதுமையும் முடிவும்

"ஜிஹாத்" என்ற உயிர்த்தியாகப் போர்களில் பங்கெடுத்துக் கொண்டிருந்தாலும், ஹஸ்ரத் பிலால் எப்பொழுதும் பெருமானாரவர்களை நினைத்துக்கொண்டேயிருந்தார். இதையறிந்த நாயகத் தோழர்களெல்லாம் அவரது வாழ்க்கையை இன்ப வாழ்க்கையாக்க முயன்று கொண்டேயிருந்தார்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் பிலால் ஒரு கனவு கண்டார். பெருமானாரவர்கள் கனவில் வந்து, "பிலாலே! இத்தகைய வறண்ட வாழ்க்கை எதுவரை நடத்துவீர்? என்னிடம் நீர் வந்து சேரும் வேளை இன்னும் வரவில்லையா? என்றார்கள். இந்தக் கனவு ஹஸ்ரத் பிலாலின் போக்கை மாற்றிவிட்டது. பெருமானாரவர்களது நினைவை இன்னும் அதிகமாக்கிவிட்டது. பழைய வாழ்க்கைச் சித்திரங்கள் அவர் மனக்கண் முன்னிலையில் தோன்றின. காய்ந்திருந்த புண்கள் நபிநாதரின் காதலால் மறுபடியும் தோன்றின.

மறுநாள் காலையில் மதீனாவுக்குப் புறப்பட்டார். வழி நடந்தார் மதீனாவுக்கு வந்தார். நேராக பெருமானாரவர்களுடைய அடக்க ஸ்தலத்திற்கு வந்தார். அங்கு நின்றார். துடித்தார். கண்ணீர் சொரிந்தார் அது தொடர்ந்து ஓடிக் கொண்டே இருந்தது.

இதற்கிடையில், "பிலால் வந்துவிட்டார்:" என்ற செய்தி மதீனாவெங்கும் காட்டுத் தீயைப்போன்று பரவியது. மக்கள் திரண்டு வந்தார்கள். பெருமானாரவர்களின் பௌத்திரரான ஹஸ்ரத் ஹஸன் வந்தார்! ஹஸ்ரத் ஹுஸைன் வந்தார்! எல்லோரும் பெருமானாரவர்களின் அடக்கஸ்தலத்தைச் சுற்றி நின்றார்கள். பெருமானாரவர்களுடைய இரண்டு பேரர்களைக் கண்டவுடன் ஹஸ்ரத் பிலால் அவர்களை மார்போடணைத்து,

அவர்களது கரங்களை முத்தமிட்டு மரியாதை செய்தார். அப்பொழுது அவர்கள்,

"பிலாலே நீர் ஏன் எங்களைவிட்டுச் சென்றீர்? எங்கள் பாட்டனர் இவ்வுலகைவிட்டுப் போய்விட்டார்கள் எங்கள் தாயாரும் சென்றுவிட்டார்கள். நாங்கள் அனுதைகளாகி விட்டோம். இனி நீர் எங்களைவிட்டுப் போகக்கூடாது. எங்களுடன் வசிக்கவேண்டும் என்றுர்கள்"

பாங்கு சொல்லவேண்டுமென்றும் அவர்கள் இருவரும் ஹஸ்ரத் பிலாலைக் கேட்டுக்கொண்டார்கள் மறுநாள் காலைத் தொழுகைக்கு முன் பாங்கு சொல்வதாக அவரும் ஒப்புக் கொண்டார்.

இந்தச் செய்தியும் மதீனுவாசிகளுக்குத் தெரிந்தது. அதிகாலையில் ஆண்களும் பெண்களும் மஸ்ஜிதே நபவீ என்னும் பள்ளிவாயிலுக்கு வர ஆரம்பித்தார்கள். வெகு காலமாகக் கேளாத குரலை—பெருமானுரவர்கள் காலத்தில் கேட்டு இன்புற்ற குரலை—இஸ்லாத்தின் முதல் முஅத்தினுடைய குரலை—மறுபடியும் கேட்க ஆசைப்பட்டார்கள். எங்கும் அமைதி. அதிகாலை வேளை. ஹஸ்ரத் பிலால் பள்ளிவாயிலின் மேல்தட்டில் ஏறி நின்றுர்.

"அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்!"

என்னும் பாங்கு நாதம் வானை நோக்கிச் சென்றது இன்னிசையுடன் பரவியது! பரவசமுண்டாக்கியது! மதீனு நகரில் ஓர் அதிர்ச்சியை உண்டாக்கியது!

"அஷ்ஹது அன் லா யிலாஹ இல்லல்லாஹ்"
"அஷ்ஹது அன் லா யிலாஹ இல்லல்லாஹ்"

மதீனுவெங்கும் தவ்ஹீத் நாதம் எதிரொலித்தது! மக்கள் தங்கள் உணர்ச்சியை அடக்கமுடியவில்லை!

"அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்"
"அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்"

என்று பிலால் சோகத்துடன் கூறினுர்.

மக்கள் பெருமானாரவர்களை நினைத்தார்கள். அவர்களது துக்கம் பொங்கிப் பொங்கிக் கண்ணீராக மாறி வடிந்தது. சிலர் மயக்கமுற்றார்கள். அன்று மதீனாவில் ஒரு துக்கம் நிறைந்த நாளாகிவிட்டது.

"அல்லாஹ்". "முஹம்மத்!" என்னும் வார்த்தைகள் எல்லோர் வாயிலிருந்தும் வெளியாகின்றன. இறைநேசர் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகளோ, தீயோர் உள்ளத்தை மாற்றி இறைவன்பால் இழுக்கும் காந்த சக்தி உடையன. ஹஸ்ரத் பிலால், அல்லாஹ்வின் நாமத்தையும் முஹம்மத் என்ற பெயரையும் பாங்கு மூலமாகக் கூறும்பொழுது அதில் ஒரு தனியான இன்பம் பிறக்கும். அந்த இன்ப கீதம் மக்களது உள்ளத்தை உருக்கிவிடும். தூய்மையுண்டாக்கும். தூய்மையான உள்ளத்திலிருந்து பிறக்கும் வார்த்தையின் பலன் சாலச் சிறந்ததாகும். அதற்கு இறகில்லை. ஆனால், அது பறந்து வானுலகு வரை சென்றுவிடுகிறது! அது காந்தமில்லை. ஆனால், காந்த சக்தி—மின்சார சக்தியுடன்—மக்கள் மனதில் ஊடுருவிச் செல்லுகின்றது!

ஹஸ்ரத் பிலால் மதீனாவில் இருக்கும்பொழுது முக்கியமானதொரு சம்பவம் நிகழ்ந்தது. அபுஸுப்யான், ஹாரிஸ் பின் ஹிஷாம், ஸஹல் பின் அம்ரு ஆகிய உயர்குலத் தலைவர்கள் கலீபா உமரிடம் பேட்டி காணச் சென்றார்கள். அதே சமயத்தில் ஹஸ்ரத் பிலால், ஸுஹைப், அம்மார் ஆகிய—முன்னர் அடிமைகளாயிருந்த—மூவரும் கலீபாவைக் காணவந்தார்கள்.

இந்த இரண்டு கோஷ்டியாரில் அடிமைக் கோஷ்டியாரை கலீபா உமர் முதலாவது அழைத்துப் பேட்டி கொடுத்தார். அபூ ஸுப்யான் போன்ற பெரிய குரைஷ் கோத்திரத் தலைவர்களுக்கு இஃதொரு பெரிய அவமானமாகத் தோன்றியது. எனவே, தங்கள் மனவருத்தத்தை அவர்கள் கலீபாவிடம் தெரிவித்தார்கள்.

அதற்கு கலீபா உமர் என்ன கூறினர்? "இஸ்லாம் மார்க்கம் குலப் பெருமையையும், இனச் செருக்கையும் அழித்து விட்டது. ஒழுக்கமும் இறைநேசமுமே இஸ்லாம் விரும்புகிறது. ஸையிதின, பிலால் போன்றவர்கள் அல்லாஹ்வுக்கும் எம்பெருமானாரவர்களுக்கும் உவப்பானவர்கள் இஸ்லாமை ஏற்றுக்கொண்டவர்கள். எம்பெருமானாரவர்களுடன் வசித்த வர்கள். பத்ர் போரில் கலந்துகொண்டவர்கள். எனவே, அவர்களுக்கு முதலில் மரியாதை செய்ய வேண்டியது எனது கடமையாகும்" என்றார்.

நபி பெருமானுக்குப் பணிவிடை செய்வதை எல்லா நாயகத் தோழர்களும் தங்கள் பெருமையாகக் கருதுவார்கள். சிலர் இந்தப் பணிக்காகத் தங்களை அர்ப்பணஞ் செய்துவிட்டார்கள். பெருமானருக்கு நபித்துவம் வந்த சில காலத்திலிருந்து ஹஸ்ரத் பிலால், பெருமானரின் குடும்ப சம்பந்தமான எல்லாப் பணிகளையும் ஏற்றுக் கொண்டிருந்தார். அதில் அவருக்கு அடிக்கடி பற்பலவிதமான கஷ்டங்களைச் சகிக்கும்படியான நெருக்கடிகளும் உண்டாகும். ஆனால், அதன் காரணமாக நபிபெருமானரை விட்டு விலகிவிட அவர் விரும்பவில்லை.

உடலை மறைக்க நல்ல ஆடையில்லாமல் ஓர் ஏழை முஸ்லிம் வந்தால் உடனே பெருமானர் ஹஸ்ரத் பிலாலை அழைப்பார்கள். அந்த மனிதனுக்கு உதவி செய்யும்படி கட்டளை யிடுவார்கள். அவரும் வந்தவருக்கு அன்னமும் ஆடையும் அளிப்பார். சில சமயம் கடன் வாங்கியும் இவ்வாறு செய்வார். பலதெய்வ வணக்க வியாபாரி ஒருவரிடம், ஒரு சமயம் ஹஸ்ரத் பிலால் கடன் வாங்கியிருந்தார். ஒரு நாள் அந்த வியாபாரி, ஹஸ்ரத் பிலாலை அழைத்துத் தெருவில் நிறுத்திக் கொண்டு, "அபிஸீனிய அடிமையே! இன்னும் எத்தனை நாள் இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமா? நான்கு நாள் மட்டும் இருக்கின்றன. இந்த நான்கு நாட்களில் நான் உன்னிடம் கடன் வசூலிப்பேன். இல்லையேல், நீ அந்தக்காலத் தில் ஆடுகளை மேய்த்ததைப் போன்று இப்பொழுதும் உன்னை

அனுப்பிவிடுவேன்" என்று கடுமையுடன் சூடான வார்த்தைகளைப் பிரயோகித்தான். இதைக் கேட்டு ஹஸ்ரத் பிலால் மிகவும் துக்கப்பட்டார். அன்று இரவு தொழுகை முடித்தவுடன் பெருமானாரிடம் அன்று நடந்த விஷயத்தைச் சொல்லி, 'என்னிடம் கடன் கொடுக்கப் பணமில்லை. அவன் என்னைக் கேவலமாகப் பேசுகிறான். ஆகையால் நான் கடன் கொடுக்கும் வரை வெளியே சென்று மறைமுகமாக வசிக்கும்படி அனுமதி அளியுங்கள்" என்று நபி பெருமானாரிடம் விண்ணப்பம் செய்தார். பிறகு, வீட்டிற்கு வந்து, மறுநாள் காலையில் பயணத்திற்கு ஆயத்தங்கள் செய்தார். ஆனால் மறுநாள் காலையில் அந்தக் கடனைக் கொடுக்கும்படியாக இறைவன் அருள் செய்தான்.

## காலஞ்செல்லல்

ஹிஜ்ரி இருபதாம் ஆண்டு. வயது அறுபது. அவரது ஆயுளின் முதல் இருபது ஆண்டுகள் அஞ்ஞானத்தில் கழிந்தன. முஅத்தின் பணியில் பதினொரு ஆண்டுகள் கழிந்தது. ஸிரியா நாட்டிலே திமஷ்க் நகரிலே ஹஸ்ரத் பிலால்-இறை பக்தர்-நாயகமவர்களின் நேசர்-இஸ்லாத்தின் முதல் முஅத்தின்-ஆவி துறந்தார். அங்குள்ள பாபுஸ் ஸகீர் (Bab-us sagheer) என்ற கோட்டைவாயிலின் அருகில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது அடக்க ஸ்தலத்தின் மீது கட்டடங்கள் எழுப்பப்படவில்லை. அதன்மீது ஒரு சாதாரண துணி போடப்பட்டிருக்கின்றது. இந்த அடக்க ஸ்தலத்திலே இஸ்லாத்தின் முதல் முஅத்தின் தூங்குகிறார். மெய்யொளி பெற்ற மகான் துயில் கொள்கின்றார்.

பாங்கு சொல்லும்பொழுது, "அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்!" என்று கூறிக்கொண்டே மஸ்ஜிதே நபவீயிலே எதிரில் உட்கார்ந்திருக்கும் எம்பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமவர்களைத் தமது விரலால் சுட்டிக்காட்டிக்கொண்டு, "முஹம்மத் (ஸல்) இறை

தூதரென்று நான் சான்று பகருகிறேன்!" என்று கூறிய பிலால் கண்வளர்கின்றார். ஒவ்வொருநாளும் அதிகாலையில் தொழுகைக்காக எம்பிரானை எழுப்பிய சிறப்பான மனிதர் நித்திய நித்திரையிலிருக்கின்றார். மதீனா நகரிலே, முன் நேரத்திலே உலகெலாம் தூக்கத்தில் இருக்கையிலே, ஒலி பெருக்கி போன்று—ஆனால் இன்னிசையுடன் ஆண்டவனது திருநாமத்தை பாங்கு மூலமாக மக்களுக்கு அறிவிப்பவர் இங்கு துயிலிடம் பெற்றிருக்கின்றார். நடுநிசியில் எழுந்து, சரீர சுத்தியுடன்—உள்ளத் தூய்மையுடன்—தனதென்பனவற்றை யெல்லாம் இறைவனிடம் ஒப்படைத்து, "அல்லாஹு!—ஹூ!—ஹூ!" என்று இறைவனை நினைத்து மெய்மறந்துவிடுவோரான ஹஸ்ரத் பிலால் இந்த அடக்க ஸ்லத்தில் தூங்குகின்றார். இந்த இடத்தைப் பார்த்தவுடன், ஆரம்ப முஸ்லிம்கள் இஸ்லாத்தின்மீது கொண்ட பற்றுக்காக எவ்வாறு துன்பங்களையும் சித்திரவதைகளையும் சகித்தார்கள் என்று நமக்கு நினைவு வருகின்றது. அதுமட்டுமா? அல்லாஹ்வுக்காகவும் அல்லாஹ்வின் திருத்தூதருக்காகவும் இஸ்லாத்தின் உயர்வுக்காகவும் நாம் எவ்வாறு பாடுபட வேண்டுமென்னும் படிப்பினையாகவும் அந்த இடம் அமைந்துள்ளது.

இந்த நாயகத் தோழரின் மரணத்தைப்பற்றி கலீபா உமர் கேட்டவுடன், "ஸையிதினா (நமது எஜமான்) பிலால் இன்று உலகிலிருந்து மறைந்துவிட்டார்!" என்று கூறித் துக்கப்பட்டார்.

ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவரை அடிமை விலங்கினின்றும் விடுதலை அளித்ததைக் குறிப்பிட்டு கலீபா உமர்-அபூ பக்ர் ஸைய்யிதினா வ அஃதக் ஸைய்யிதினா பிலால். "அபூ பக்ர் ஸைய்யிதினா (நமது எஜமான்) ஆவார். ஸைய்யிதினா (நமது எஜமான்) பிலாலை அடிமைத் தளையிலிருந்து அவர் விடுதலை செய்வித்தார்" என்பார்.

ஹஸ்ரத் உமர் போன்ற உயர்ந்தோர், ஹஸ்ரத் பிலாலை "ஸைய்யிதினா" என அழைத்தல், இஸ்லாம் மார்க்கத்தில்

உண்மையான சகோதரத்துவத்தையும், நபிநாதரைப் பின்பற்றுவோருக்கு இஸ்லாமில் அளிக்கப்படும் பெருமையையும் விளக்குகின்றது. பெரிய பெரிய நாயகத் தோழர்களான ஸஹாபிகளெல்லாம் கலீபா உமர் என்றால் பயப்படுவார்கள். அத்தகைய கலீபா உமர் கூட, ஹஸ்ரத் பிலாலை, ''நமது எஜமான்—ஸைய்யிதினா பிலால்'' என அழைத்த பெருமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஏன்? உண்மையான இறைகாதல், கலக்கமற்ற கீழ்ப்படிதல், உள்ளன்புடன் விசுவாசித்தல்—இவற்றில் ஹஸ்ரத் பிலால் நமக்கொரு முன்மாதிரியாக விளங்கவில்லையா? பெருமானாரவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் பிலாலுடைய வாழ்க்கை நிலையை ஆராயுமிடத்து அவர் நபிகள் நாதரிடம் கொண்டிருந்த நேசம்—பற்று—காதல்—இஷ்க் எத்தன்மையதென்று வெளியாகின்றது.

இறைவனுடைய திருத்தூதரது பணி செய்தலே ஹஸ்ரத் பிலால் தமக்கென வகுத்துக்கொண்ட வாழ்க்கையின் குறிக்கோள். இரவும் பகலும், வெயிலிலும் மழையிலும், இன்பத்திலும் துன்பத்திலும் பெருமானாரவர்களுடன் இருக்க விரும்புவார். பெருமானார் வெளியே சென்றால், விளக்கைத் தேடி விட்டில் செல்வதைப்போன்று பின்னால் செல்வார். தாயைச் சேய் விடாததைப்போன்று தொடவார். காந்தத்தால் இரும்பு இழுக்கப் படுவதைப்போன்று உள்ளத்தால் உந்தப்பட்டுச் செல்வார்.

அவர் ஏழையாக இருந்தார். இருந்தாலும் தமக்குக் கிடைக்கும் பணத்தில் ஒரு பாகத்தைப் பத்திரப்படுத்தி வைத்து, நபிபெருமானாரவர்களுக்கு விருந்தளித்து இன்பம் பெறுவார்

அவரது இஸ்லாமிய வாழ்க்கையும் பெருமைக்குரியது, எப்பொழுதும் பாங்கு சொல்வதும், பெருமானாருக்குப் பணி செய்வதுமாக இருந்த ஹஸ்ரத் பிலாலின் பெரும்பான்மையான நேரம் பள்ளிவாயிலில் கழிந்தது. இறைவணக்கத்தில் அதிக இன்பம் காண்பார். இரவில் தனிமையாக நின்று

வெகுநேரம் கண்விழித்து ஆண்டவனைத் தியானிப்பவர் இறைவன் மீதும், இறைவனுடைய தூதர் மீதும் விசுவாசம் கொள்வதே எல்லா நற்செயல்களுக்கும் அடிப்படையாக இந்தப் புனிதர் கருதுவார்.

ஹஸ்ரத் பிலால் தமக்கென ஒரு புதுமையான, அற்புதமான, புனிதமான உலகைச் சமைத்துக்கொண்டார். அதை "பிலாலி துன்யா" (பிலால் உடைய உலகம்) என்பர். அந்த உலகம் எல்லோருக்கும் கிடைக்காது. அவர் நாயகமவர்களுடன் வசித்து, முழுமதிபோன்ற முஹம்மத் நபியவர்களின் முகத்தைக் கண்டு களிப்பார். பெருமானாரவர்களுக்காகவே அவர் உலகில் வாழ்ந்தார்.

பெருமானாரவர்களுடைய தோழர் "அஸ்ஹாப்" களில் பிலாலும் ஒருவர். அந்தத் தோழர்களுக்கு குர்ஆனே வாழ்க்கைத் துணை. குர் ஆனுடைய சட்டங்களையே பின்பற்றினார்கள். பெருமானாரவர்களுடைய வாழ்க்கையே அவர்களுக்கு முன்மாதிரியான வாழ்க்கை. அந்தத் தோழர்களது எளிய வாழ்க்கையும், உயர்ந்த நோக்கும், சிறந்த ஒழுக்கமும், உண்மையான சகோதரத்துவமும், இறைநேசமும் அவர்களது வாழ்க்கைக்கு எழிலூட்டி, மற்றோருக்கும் படிப்பினையாக இருந்தது. இம்மாதிரியான வாழ்க்கையை—எடுத்துக்காட்டான வாழ்க்கையைப் பின்பற்றுவோர் அனைவரும் இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவார்கள்.

"அல்லாஹும்ம! ஆதினுபித் துன்யா ஹஸனதன் வபில் ஆகிரதி ஹஸனதன்" அல்லாஹ்வே! இவ்வுலகில் எங்களுக்கு மிகச்சிறந்தவற்றை அருள்வாயாக! மேலும் மறு உலகிலும் மிகச் சிறந்தவற்றை எங்களுக்கு அருள்வாயாக! ஆமீன்!

# வளர்மதி வெளியீடுகள்

ரூ. பை.

1 திருமறையின்
தோற்றுவாய் 6 00
2 குர்ஆன்மணிமொழிகள் 1 00
3 அண்ணல் நபி 0 60
4 உத்தம நபி 1 00
5 அண்ணல் நபியின்
(ஹதீஸ்) அருள் மணிகள் 6 00
6 நபிநாயகம் நல்லுரைகள் 0 75
7 பெருமானார் பொன்மொழிகள் 2 00
8 பாலர் ஹதீஸ் 0 50

## ஜீவிதங்கள்

9 ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) 1 50
10 ,, உமர் ,, 1 50
11 ,, உஸ்மான் ,, 1 50
12 ,, அலீ ,, 1 50
13 கதீஜா ,, 1 00
14 பாத்திமா ,, 1 50
15 ,, பிலால் ,, 0 80
16 ஸல்மான் பார்ஸி 0 75
17 ,, காலித் பின் வலீத் 1 50
18 உவைஸ் கரனீ 0 75
19 உத்தமர் உமர் 0 75
20 தளபதி தாரிக் 0 75
21 ஸுல்தான் ஸலாஹுத்தீன் 1 00
22 ராபியா பஸ்ரீ (ரஹ்) 0 75
23 மன்ஸூர் ஹல்லாஜ் ,, 1 00
24 இமாம் அபூ ஹனீபா ,, 0 75
25 இமாம் கஸ்ஸாலீ ,, 1 00
26 அப்துல் காதிர் ஜீலானீ 1 50
27 அலீ இப்னு ஸீனா
(மருத்துவ மேதை) 0 75
28 இப்னு கல்தூன் 0 75
29 ஸஹாபாக்கள் (நாயகத்
தோழர்கள்) சிறப்பு 0 75
30 இக்பாலின் முறையீடும்,
மறுமொழியும் 0 80
31 முஸ்லிம்வீரப்பெருமக்கள் 1 00
32 இஸ்லாமும் அதன்
உட்பிரிவுகளும் 1 50

## ஒழுக்கக் கதைகள்

33 நீதிக் கதைகள் 0 50

I, L:11ஜ

...ப.
34 சிறு கல... ...5
35 ஒழுக்க... ...0
36 பாலர் க... ...0
37 சிறுவர் அ... ...25
38 பாலர் அறி... ...25
39 தியாகம் (ஜ... 0 60
40 இந்தியக் கதைகள் 0 75
41 நகைச்சுவைக்கதைகள் 1 00
42 இன்சுவைக் கதைகள் 1 00

## இஸ்லாமிய கதைகள்

43 அரபுநாட்டுக் கதைகள் 0 75
44 பாரசீகக் கதைகள் 0 75
45 இஸ்லாமியக் கதை விருந்து 0 75
46 முஸ்லிம் கதைக்கொத்து 0 50
47 இறைநேசர் (அவ்லியா)
கதைகள் முதற்பகுதி 0 40
48 ,, இரண்டாம் பகுதி 0 40
49 இறைதூதர் கதைகள் 0 45
50 இஸ்லாம் வினா-விடை I 0 40
51 ,, வினா-விடை II 0 40

## இஸ்லாமிய வரலாறு

52 முஹம்மத் (ஸல்)
பரிசுப் பதிப்பு 3 00
53 ,, மலிவுப் பதிப்பு 2 00
54 நாற்பெருங் கலீபாக்கள் 2 50
55 உமய்யாக்கள் 2 00
56 அப்பாஸிகள் I 2 00
57 அப்பாஸிகள் II 2 75
58 ஆப்பிரிக்காவில்
முஸ்லிம் ஆட்சி 3 00
59 ஐரோப்பாவில்
முஸ்லிம் ஆட்சி 3 00
60 இந்தியாவில் முஸ்லிம்
ஆட்சி முதற் பகுதி 3 00
61 ஷை இரண்டாம் பகுதி 3 00
60 துருக்கி 3 00
63 தென்கிழக்கு ஆசியா 3 00
64 ஈரான் 3 00